# அவன் யார்?

"அல்லி! எனக்குத் தலைவலி போடுகிறதம்மா! கண்ணை மூடிக்கொண்டு படுத்திருக்கப் போகிறேன். யாராவது தைத்த துணிகளைப் பெற்றுப்போக வந்தாலும் என்னை எழுப்பாதே! நீயே துணிகளோடு இருக்கிற பேரையும் பில்லையும் பார்த்து எடுத்துக் கொடுத்துவிடு! எனக்குக் கண்ணைத் திறக்கவே முடியவில்லை, எழுப்பாதே!" என்று அல்லியிடம் கூறியவண்ணம், வாசல் திண்ணைக்கு உட்புறம் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலை இன்னும் உள்ளே இழுத்துப் போட்டுக்கொண்டு, சோர்வுடன் அதில் படுத்துவிட்டான் ரஹ்மான்.

அவனுக்கு அத்தகைய சோர்வும், தலைவலி உபாதையும் உண்டானதற்குக் காரணம் அவன் மனதிலிருந்த வருத்தத்தின் சுமையும் கலக்கமும்தான். திடமான சரீரமும், உறுதியுள்ள மனமும் படைத்த அவன், இதுவரை ஒருநாள் கூட இவ்வளவு வாட்டமுற்றதில்லை. ஆனால் அவன் கூட சஞ்சலமுற்று சோர்வுடன் படுத்துவிட்டானென்றால் அதற்குக் காரணம், இருக்கத்தானிருந்தது. இன்று பகல் அவன் தன் அல்லியின் மனதிலே இருந்த ஒரு முக்கியமான எண்ணத்தைக் கண்டு கொண்டது தான், உண்மைக் காரணம். அல்லி, அவனிடம் ஸௌஜன்யமாக, நிதானமாகக் கூறிய ஒரு சில வாக்கியங்களில், அவளுடைய உறுதியான, சலனமற்ற ஒரு எண்ணத்தைத் தெரிந்து கொண்டிருந்தான். அவன் எதிர்பாராத அந்தச் சொற்கள், அவனுக்கு அதிர்ச்சியைத் தரக்கூடிய ஒரு ஆழ்ந்த அந்தரங்க எண்ணத்தை வெளிப்படுத்தின.

அப்போதுமுதல் அவன் மனம் ஓர் நிலையிலிருக்கவில்லை. அல்லியைப் பற்றித் தீவிரமான யோசனைகளில் ஆழ்ந்திருந்தான் அவன். அவன் மனதிலே சுழன்று சுழன்று வந்த யோசனைச் சக்கரங்கள், அப்பப்பா, அவன் மூளையைக் கிறுகிறுக்கச் செய்துவிட்டன! 'கிர், கிர்' என்று மணிக்கணக்காகச் சுழன்ற இராட்டையின் ஒலி, இராட்டை நின்றபிறகும் செவிகளில் ஒலிப்பதுபோல, சிந்தனைச் சுழலிலே அமுங்கி எழுந்த அவன் மனது, இன்னும் அந்த பிரமை நீங்காமல், சுறுசுறுப்பு அடையாமல் சோர்ந்து கிடந்தது.

பரந்து விரிந்திருக்கும் கடலுக்கு அணைபோட முடியுமா? அது போலவேதான், பாவம், மனக் கொந்தளிப்பை அடக்க முயன்று கொண்டு தவித்த ரஹ்மானின் முயற்சிகளும் வீணாயின. கடல் மீது உல்லாசமாக படகையோட்டிச் செல்லும் பிரயாணி, எதிர்பாராத விதமாய்க் கடலில் அமிழ்த்தப்பட்டுப் பல முயற்சிகளுக்குப் பின் கரை சேருகையில் உணரக்கூடிய உடலசதியை இன்று ரஹ்மான் உணர்ந்தான்.

கடந்த பன்னிரண்டு வருடங்களும் ஒன்றன் பின் ஒன்றாக, அலை மேல் அலை மோதுவதுபோல, அவன் மூளையைத் தாக்கி அவனைத் திக்கு முக்காட வைத்தன.

ஆ! பன்னிரண்டு வருடங்களுக்கு முன்.... ஒருநாள்....

** ** **

ரஹ்மான் தன் சகாக்களுடன் அன்று காலைதான் அந்தக் கிராமம் வந்திருந்தான். பயங்கரமான ஒரு தொழிலில் இறங்கியிருந்த அவன், தன் பங்கு வேலையைச் செய்ய, அவ்வூர் சிறுவர் பள்ளிக்கூடத்திற்குச் சிறிது பக்கமாக இருந்த ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்து காத்திருந்தான். அவன் சகாக்களில் இரண்டு பேர் அன்று அவ்வூர்க்குப் புறம்பாக நடக்கவிருந்த சந்தைக் கடைக்கும், வேறு இருவர் அக்கிரஹாரத்திற்கும், ஒருவன் சேரித் தெருவுக்கும், இன்னொருவன் குயவர் தெருவுக்கும் போயிருந்தார்கள். ஆளுக்கு ஒரு உருப்படி வீதம், ஏழு பேரும், ஏழு குழந்தைகளைப் பிடித்துக்கொண்டு அன்று மாலை ஆறு மணிக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடத் திட்டம் போட்டிருந்தார்கள். அந்தக் குறிப்பிட்ட இடம், அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனுக்கும், அடுத்த கிராமத்துக்கும் இடையே செல்லும் ரஸ்தாவிற்கு ஒதுக்காக இருந்த ஓர் அடர்ந்த தோப்பு.

அவ்வூர்ச் சிறுவர் பள்ளி அக்கிரஹாரத்திற்குச் சிறிது தொலைவிலே இருந்தது. அக்கிரஹாரத்தின் வலது கோடியிலிருக்கும் சிவன் கோவிலிருந்து தொடங்கும் ஒரு சாலை, இரண்டு மூன்று இடங்களில் வளைந்து வளைந்து பள்ளிக்கூடத்தையடையும். அவ்வூர் சிறுவர் சிறுமியருக்கு அது ஒரு பொருட்டாக இருந்ததில்லை. குழந்தைகளின் பெற்றோர்க்கும் அந்த வழியே குழந்தைகள் பள்ளி செல்வது, ஒரு பொழுதும் அச்சம் அளித்ததில்லை.

தினத்தை விடச் சீக்கிரமாக அன்று அந்தி வேளையில் தன்னைக் கவ்விடப் போகும் மேகப் படலங்களையும், இருளையும் அறியாத கதிரவன், பயமறியா இளங்கன்றைப் போல, மிகவும் பெருமிதத்துடன் தன் சக்திகளையெல்லாம் பூமியின் மீது செலுத்திய வண்ணம் வானவீதியில் அசைந்து அசைந்து வந்து கொண்டிருந்தான். அத்தகைய கடுமையான பிற்பகலில்தான் ரஹ்மான் அந்த ஆலமரத்து நிழலின் கீழ் அமர்ந்திருந்தான்.

நடுப்பகலில் குளிர்ச்சியை நாடி அதே ஆலமரத்தடியில் ஒதுங்கிய ஓரிரு வழிப் போக்கர்கள் கொஞ்சம் கொஞ்சம் தங்கி விட்டுப் போய்விட்டார்கள். ஆனால் ரஹ்மான், தான் எதிர்பார்த்த அந்த நேரம் வரை அசையவில்லை இடத்தைவிட்டு.

'கண கண' வென்று ஒலித்த பள்ளிக்கூடத்து வெண்கல மணியின் ஓசை, 'கிடு கிடு' வென்று வானத்தில் இடிக்கும் இடியைப் போன்று, அந்த நிசப்தமான இடத்தில் மாறுதலை உண்டாக்கியது. மேகக்கூட்டங்கள் ஓடி வருவதே போன்று, சிறு சிறு பகுதிகளாக குழந்தைகள் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர் சந்தோஷக் கூக்குரலிட்டுக் கொண்டும், குதித்துப் பேசிக் கொம்மாளமடித்துக் கொண்டும், வீடு நோக்கி வரலாயினர்.

ஆம்! வீடு நோக்கிச் செல்லும் அவர்கள் சந்தோஷத்திற்குக் குறையென்ன? வீட்டுக்குப் போனதும் எத்தகைய சுதந்திரமும், ஆனந்தமும் அவர்களுக்குக் கிட்டும்! பள்ளியின் கஷ்டமான சட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருந்துவிட்டு, அவர்கள் வீடு திரும்பியதும், பெற்றோர்கள் அவர்களை வாரியணைத்து உச்சி முகரலாம்! அன்புடன் பக்ஷணங்கள் தரலாம்! பெற்றோர்களுக்குத் தங்கள் புதிய அனுபவங்களைக் கூறிவிட்டு, தங்கள் சகாக் குழந்தைகளுடன் தெருவில் ஓடியாடி விளையாடலாம்! "சின்னப்பாப்பா"வுடனும் 'தங்கச்சி'யுடனும் மழலை பேசி கொஞ்சி விளையாடலாம்! அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்திக் களிக்கலாம்! 'ஆ, இவர்களுக்குக் கவலை ஏது!'

ஆனால் எந்த விதிக்கும் விலக்கு ஒன்று உண்டே! இந்தக் குழந்தைகளிலும் வீட்டுக்குப் போக அஞ்சும் குழந்தைகள் இருக்க மாட்டார்களா?.... இருப்பார்கள்! சரியாகப் பள்ளியில் படிப்பதில்லையென்றோ, அடிமேல் அடி வாங்கும் பேதைக்குழந்தைகள் இருக்க மாட்டார்களா?

கும்பலாக வரும் குழந்தைகள் கூட்டத்தைப் பார்த்ததும் பொதுவாக எவர்க்கும், 'கவலையே இல்லாத ஆத்மாக்கள்!' என்றே தோன்றும்! ஆனால் அந்தந்த வயதிற்கேற்றபடி ஆசாபாசங்களும், குறைகளும், வருத்தங்களும் அவர்களுக்கும் நிறைய உண்டு!

ரஹ்மான் உன்னிப்பாகக் கவனித்தான் அந்தக் குழந்தைகள் கோஷ்டியை பள்ளிக்குப் பக்கமாக, எல்லோருக்கும் கடைசியாக வந்து கொண்டிருந்த ஒரு சிறு பகுதியை நோக்கி விரைந்தான் அவன்.

அதோ! அவள் வேண்டும்! அவளேதான்?

பால் போன்ற உடல் நிறமும், பால்வடியும் முகமும் படைத்து, குருகுருப்பான இரண்டு கரிய விழிகளால் நெஞ்சையள்ளும் சக்தியைப் பெற்றுத் தன் சின்னஞ்சிறு கைகளை ஆட்டி ஆட்டிப் பேசிய வண்ணம், தோழிகளுடன் அசைந்து அசைந்து வந்துகொண்டிருந்த அந்தச் சிறுமிதான், அவன் கவனத்தை இழுத்தாள். ஒரு சர்வசாதாரணமான சீட்டிப் பாவாடையும், சட்டையும், கையில் இரண்டு வெள்ளி வளையல்களும்தான், அவள் உடலையணைத்து,

அணிகளாக விளங்கின எனினும் அவள்தான் அந்தச் சிறுமியரிடையே தலைவிபோல காட்சியளித்தாள். தோழிகள் புடைசூழ வரும் அரசகுமாரி போல விளங்கினாள் அவள்.

அவளை அணுகிய ரஹ்மான், "பாப்பா! உன்னை அப்பா கூட்டிண்டு வரச்சொன்னாரு! வா, சீக்கிரம் போகணும்! உன்னைத் தூக்கிண்டு போகணும்! உன்னைத் தூக்கிண்டு போறேன், தோள்மேலே ஏறிக்கோ!" என்று கூறிவிட்டு, அவள் பதிலுக்குக் காத்திராமல், சர்வ சுதந்திரம் தாண்டவமாடும் முகபாவத்துடனும், நடையுடனும், அவளைத் தூக்கிக்கொண்டு, நடக்கலானான்.

குழந்தை கண்களை மலரவிழித்தாள்! பயத்தினாலன்று அந்தப் பார்வை! ஆச்சர்யமும் சந்தோஷமுமே அந்தக் கண்களில் பிரதிபலித்தன! 'உம்! ஏறிக்கறேன்!' என்றாள் தோளில் மேல் உட்கார்ந்துகொண்டே.

சாதாரணச் சிறுமீன்களைப் பிடிக்கக் கடலுக்குப் போகும் செம்படவனுக்கு, முத்துக்கள் அடங்கிய பேழையோ சிப்பியோ கிடைத்தால், அவன் எவ்வளவு சந்தோஷமடையமாட்டான்! அது போல சந்தோஷம் அன்று ரஹ்மானுக்கு. களிப்புடன் தன் தோள்மேல் அமர்ந்து ரகளை ஏதும் செய்யாமல், அழாமல், முனகாமல், பார்ப்போருக்குச் சந்தேகம் எழுப்பாமல் தன் தோள்மேல் சவாரி செய்ய முன் வந்த அந்தச் சிறுமியை அவன் அந்தரங்கம் வாழ்த்தியது!

சில வினாடிகள் கழிந்தன. அவன் தலையை நன்றாகப் பிடித்துக்கொண்டு, பயம் சிறிதும் உணராத சிறுமி, ஆச்சர்யம் நிறைந்த தன் கண்கள் விரிய, "அப்பா என்னோட பேசறத்துக்கா கூப்பிட்டார்? நேக்கு பொம்மை தருவாளா?" என்றாள்!

அதற்குள் அவன் அந்த இடத்தைவிட்டு ஒரு பர்லாங்கு வந்திருப்பான் கிட்டத்தட்ட!

"ஆமாம், பாப்பா!" என்றான் அவன். அப்போது அந்தச் சிறுமியின் மனதிலே உண்டாகியிருக்கக் கூடிய சந்தோஷத்தில் பாதை அந்த இடத்தில் பிரிந்ததை அவள் எங்கே கவனித்திருக்க முடியும்? பாதை அக்கிரஹாரத்துக்குப் போகாது என்பதை அவள் கவனிக்கவில்லை. வீட்டுக்குத்தான் போகிறோம் என்ற நம்பிக்கைதானே குழந்தை மனதில்! சாலையின் மாறுதலைக் கவனிக்க, வெள்ளை மனதிலே சந்தேகம் எங்கிருக்கும்?

குழந்தை ஏதேதோ பேசிக்கொண்டு வந்தாள். அவன் பதிலே சொல்லாமல், காரியத்திலேயே கருத்தாழ்ந்தவனாய் தான் போய்ச் சேர வேண்டிய இடத்தைப் பற்றிய யோசனைகளுடன் சென்று கொண்டிருந்தான்! பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் ரயிலைப்போல உணர்ச்சியில்லா யந்திரம் போல, அவன் கால்கள் ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் சாலை வழியே நடந்தன. ஸ்டேஷனையும் தாண்டியல்லவா அவன் போகவேணும், தன் தோழர்களைக் கூட!

மூச்சு விடாமல் பேசிக்கொண்டு வந்த அந்தச் சிறுமியின் வார்த்தைகளைக் கொஞ்சம் கவனித்து வரத் தொடங்கினான் அவன்.

"எனக்கு எப்பவுமே ஆத்துக்குப் போகணும்னா பயம்! மொள்ள குட்டிகளோட பேசிண்டே போவேன்! இன்னிக்கும் சச்சுவோட மொள்ள போகலாம்னு நினைச்சேன்! ஆத்துக்குப் போனா, சித்தி அடிப்பாள், திட்டுவாள் அப்பாவும் என்னோட பேசவே மாட்டா! 'அம்பி' யோடேயே வெளையாடிண்டிருப்பா! அவனுக்குப் பேசவே தெரியாது - ஆனா..... அவனோடதான் பேசுவா! எனக்குப் பேசணும்னு இருக்கும் அப்பாவோடே! ஆனா, என்னோடே பேசவே மாட்டா!. 'அப்பா'ன்னு கூப்பிட்டா, 'ஏண்டி வாசல்லே போயி வெளையாடேன்னு' விரட்டிடுவா! எனக்கு ஆத்துக்குப் போகவே பிடிக்காது!"

சட்டென்று ரஹ்மான் நிமிர்ந்து பார்த்தான் அவளை! "ஏன் பாப்பா அப்படின்னா ஆத்துக்குப் போக வேண்டாமா?' என்றான்!

"உம்! இன்னிக்குப் போகணும்! அப்பாதான் என்னை வரச்சொன்னாருன்னியே! நான் போய் அப்பாவோடே பேசணும் விளையாடணும்!..... முந்தி..... அம்மா இருந்தா நேக்கு! அப்போ அப்பா என்னோட நிறைய விளையாடுவா! டவுன்லேந்து நேக்கு பொம்மையெல்லாம் வாங்கிண்டு வருவா! எனக்கு அம்மா தினம் பக்ஷணம் நிறைய தருவா! இப்போதான் சித்தி

பக்ஷணம் கேட்டா கோவிச்சுக்கரா! கொஞ்சூண்டு முதல்லே தந்துட்டு, அப்புறம் தரவே மாட்டா! நான் சித்தியைக் கேக்கறதேயில்லை! சச்சுவோட பாட்டி தான் நேக்கு நெல்லுமாவு தோங்காமாவு எல்லாம் தருவா!...... இப்போ நேக்கு அம்மா இருந்தா... நேக்கு பக்ஷணம் நிறைய கிடைக்கும்... என் பேஸன் நிறைய...."

ஏதோ உணர்ச்சி வசப்பட்ட ரஹ்மான், "பாப்பா! நோக்கு அம்மா இல்லே இப்போ?" என்று கேட்டான்.

"ஆத்துலே இல்லை! மானத்துலே இருக்கா இப்போ! அங்கிருந்து என்னைப் பார்த்துண்டு இருக்காளாம்! ஆனால் எனக்கு எங்கம்மாவைப் பார்க்கவே முடியறதில்லை!"...

மறுபடியும் நிமிர்ந்து நோக்கினான் ரஹ்மான். குழந்தையின் கண்களின் மணிகள் மேல் தன் கண்களைச் செலுத்தினான்! ஏதோ வேதனை அவனையும் ஆட்கொண்டது. அந்தக் கண்களில் தேங்கியிருந்த ஏக்கத்தைக் காணக் கூசியது அவன் நெஞ்சம். தலையைக் கவிழ்த்துக் கொண்டான்!

தீவிரமான யோசனைகளில் ஈடுபட்டான் அவன். நெருப்பில்பட்ட வைரமெனக் கருகிய அவனுடைய வைர நெஞ்சம் ஏதோ ஒரு புதிய தெய்வீக மாறுதலை... ஒளியை.... அடையவிருந்தது.

தன் தோள் மேலே அமர்ந்து மடை திறந்தாற்போல பேசும் அந்தக் குழந்தையை_தான் எங்கே எடுத்துப் போகிறான்?.... எதற்காக எடுத்துப் போகிறான்?....

அப்பப்பா!.....இதென்ன கொடுமை! ஐயோ! தான் எத்தனை கொடூர மனம் படைத்த பாவி!

"என்ன!... உண்மையாகத்தான் அத்தகைய கொடியவனா?... தான் அந்தக் குழந்தையைப் பள்ளிக்கூடத்தருகில் பிடித்துத் தோளில் தூக்கிய பொழுது.... தன் மனதிலே எண்ணம்தான் என்ன?

அவன் மனம் துவண்டது! அந்தோ! தான் அத்தகைய ராட்சப் பிறவியா?.... இல்லையே!... இல்லை.... போலத் தோன்றுகிறதே! ஆம்! அல்ல! அல்ல! அவ்வளவு பாவிதான் அல்ல! மரத்தடியிலிருந்து அவன் குழந்தையை நோக்கி விரைந்து சென்றபொழுது, அதன் சிறு அங்க அசைப்பிலும், அழகின் பொலிவிலும் மெய் மறந்து அதை வாரி அணைக்கவே ஓடினான்! வேறு ஒருவித பொல்லாத உணர்ச்சியும்.... அப்போது.... அந்த சமயத்தில்..... இல்லையே அவனுக்கு! அவன் தன் தொழிலின் கொடுமையை அப்போது ஒரு கணம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தால்.... அப்போது அவன்.... வேறு எந்தக் குழந்தையாவது, கடமையின் மௌடில்யத்தினால் எடுத்து வந்திருப்பான்! தான் இந்தக் குழந்தையைத் தூக்கி வந்தது, அன்புப் பெருக்கினாலேயேயன்றி.... வேறு எந்தவித பொல்லாத உணர்ச்சியினாலுமன்று!.......... ஆம்! அவன் மனதில் இருக்கும் எண்ணங்கள்_ வேறு! உணர்ச்சிகள் வேறு!

இப்படி தன்னைப்பற்றிய ஆராய்ச்சிகளிலே இறங்கியிருந்த அவன் உள்ளம், ஏதோ சில வேகமான திட்டங்களைப்பற்றி திரும்பியது.

"எனக்கு மானத்துக்குள்ளே போய் அம்மாவைப் பார்க்கணும்னு இருக்கு! ஆனால் எனக்கு மானம் எட்டவே மாட்டெங்கிறது. நான் சின்னவளோல்லியோ! கொஞ்சநாள் முந்தி நான் மேஜை மேலேறி, பீரோ மேலே ஏறிப் பார்த்தேன் மானம் எட்டமாக்கும்னு! எட்டல்லை. பீரோ மேலேருந்து எம்பிக்கூட பார்த்தேன்! அப்பவும் எட்டலை! என்ன செய்யலாம்னு பார்த்திண்டிருந்தேன்! அப்போ சித்தி வந்து என்னை பீரோ மேலேருந்து இறக்கிவிட்டு, இனிமேல் ஏறாதேன்னு அடிச்சா! கண்ணாடி பீரோ கீழே சாஞ்சு உடைஞ்சுடும்னு திட்டினா! அப்பாக்கிட்டே சொல்லி இன்னும் அடிக்கச்சொல்றேன் பாருன்னு சொன்னா! அன்னிக்கு சச்சுவோட பாட்டியைக் கேட்டேன். அம்மாவை எப்படிப் பார்ப்போம்னு! நானும் அப்பா ஒசரம் ஆனா, பார்ப்பேன்னு சொன்னா! ஆனா நான் ரொம்ப நாளா எங்க கூடத்துச் சின்ன மேஜையவ்வளவு ஒசரம் தான் இருக்கேன், இத்தனையூண்டா! எப்போ அப்பா அவ்வளவு

ஒசரம் ஆவேனோ?..... மாமா, மாமா! இரேன்! இரு மாமா! இப்போ நான் ஒசரமாயிருக்கேனே... நின்னுண்டு பார்க்கிறேன் இரு!....

நின்றான் ரஹ்மான் குழந்தை பேசிக்கொண்டு வந்ததைக் கொஞ்சநேரமாகக் கவனித்து வந்திருந்த அவன் மனம்- ஒரு உறுதியான முடிவுக்குச் சற்று முன் வந்திருந்தது.

பாப்பா! இப்போ எல்லாம் அம்மாவைப் பார்க்க முடியாதம்மா நீயே, என்மேலே ஏறிக்காதே, பெரியவளா ஆனால்தான் அம்மாவைப் பார்க்கலாம்!... பாப்பா! இப்போ அப்பா உன்னோட விளையாடறத்துக்குக் கூப்பிடல்லை! சித்தி நீ விஷமம் செஞ்சேன்னு சொன்னாளாம்! அப்பா உன்னைக் கோவிச்சுண்டு அடிக்கணும்னு கூட்டிண்டு வரச்சொன்னாரு! என்றான்.

'ஐயையோ! மாமா! என்னைக் கூட்டிண்டு போகாதே! இறக்கிவிட்டுடு! நான் ஆத்துக்கு வரல்லை!' என்று உடனே பதறினாள் அவள். ஏதோ மரச் சர்ப்பம் தீண்டப்பட்டவன், மரத்திலிருந்து கீழே இறங்கக் தவிப்பதுபோல தவித்தாள் அவள். கீழே இறங்கத் துடியாய்த் துடித்தாள்.

அவளை அன்புற, இறுகப்பிடித்துக்கொண்ட ரஹ்மான், "பாப்பா! என் கண்ணு! பயப்படாதே! வீட்டுக்குப் போகவேண்டாம்! ஆனால்.... நீ எங்கே ராத்திரி தூங்குவே! உனக்குப் பசிக்குமே! நீ எங்கிட்டயே இருக்கயா? நான் பக்ஷணம் எல்லாம் தரேன்! அப்பா அடிக்காமல் பார்த்துக்கறேன்!" என்றான்.

"ஓ! ஆகட்டும், மாமா! இருக்கேன் மாமா உன்னண்டையே! ஆத்துக்கே போகமாட்டேன்!" என்று கூறிவிட்டு, மீண்டும் தன் கால்களை அவன் கழுத்தைச் சுற்றிப்போட்டு, அழுந்தி உட்கார்ந்து கொண்டாள், அவன் கழுத்தின் மீது.

அந்தக் 'கால்கட்டை' ஆர்வமுடன் முகர்ந்துவிட்டு, ரஹ்மான் தன் கால்களை ரயில்வே ஸ்டேஷனுக்கு உள்ளேயே போகவிட்டான். அப்பொழுது ஸ்டேஷன் கடியாரம் மணி 5-15 தஞ்சைக்குப் போகும் ஒரு பாஸஞ்சர் வரவிருந்தது.... அதற்கே ஒரு ஒன்றரை டிக்கட்டை வாங்கினான். சில தின்பண்டங்களையும் வாங்கினான். தன் மேல் துண்டை அவள் தலை மீதிருந்து நன்கு போர்த்தியிருந்ததால், தைரியமாகவே, ரயில் வரும்வரை காத்திருந்து, ரயில் வந்ததும் அதில் ஏறவும் ஏறிவிட்டான் குழந்தையுடன்.

ரயிலில் மூன்றாவது வகுப்பு வண்டியில் ஓர் மூலையில் குழந்தையுடன் உட்கார்ந்து அதற்குத் தின்பண்டங்களைக் கொடுத்துக் கொண்டே, அதன் இடைவிடாத கேள்விகளுக்குப் பதில்களையும் உத்ஸாகத்துடன், அதற்கு ஸ்வாரஸ்யப்படும்படி கூறிவந்தான் ரஹ்மான்.

குழந்தைகளுடனோ சிறுவர்களுடனோ நெருங்கிப் பழகியிராத அவனுக்கு-கல்மனதினனான அவனுக்கு - எப்படி அத்தகைய இனிய செய்கைகளும், சமயோசிதமான நல்ல யோசனைகளும் தோன்றின? குழந்தை மனதைப்பற்றிய சாஸ்திரத்தைப் படித்து அறிந்தவன் போலல்லவா அவன் நடந்து கொண்டான்?

ஆம்! இடையனும் கடையனுமாயிருந்த காளிதாஸனின் நாவிலே, வாக்குத் தேவி அமர்ந்ததும் எத்தனை மாறுதல்கள் - அதிசயங்கள், நடக்கவில்லை! அது போலவே தான் போலும் இவன் மனதிலே அறிவுத் தெய்வம் அமர்ந்ததும், இவனும் தனிமனிதனாகிவிட்டான்.

குழந்தையைப் பலவிதங்களிலும் திருப்தி செய்துவிடவே, ஏக்கமே உருப்போல் இருந்த குழந்தை ஏதோ அலாதி அமைதியடைந்தவளாய், அவன் மடியில் தலைவைத்துப் படுத்தாள். அவன் அவளை அணைத்து உச்சி முகர்ந்தான். புதியதொரு அன்பணைப்பிலே ஆனந்தம் கண்ட அந்த சிறு ஜீவன், கண்ணயர்ந்தது. கண்வளர்ந்திருந்த சிறுமியின் முகத்தை உற்று நோக்கினான். அவன் பல வினாடிகள் மெல்ல அவள் நெற்றியிலிருந்த குங்குமப் பொட்டை அழித்துவிட்டான்!

நல்லவேளை அவன் அப்போது அந்தத் திலகத்தை அகற்றியது. சிறிது பொறுத்து வண்டி நின்றபோது ஒரு வயோதிகர், அவன் இருந்த பெட்டியில் ஏறியவர், அவன் உட்கார்ந்திருந்த

பெஞ்சு மீதே அமர்ந்தார். அந்தப் பெட்டியில் இவன் அமர்ந்திருந்த பெஞ்சு பெட்டியின் ஒரு கோடியில் இருந்தாலும் அவர் அதை நாடி வந்திருந்தார். அந்த நாளில் மிகவும் சகஜமாயிருந்ததுபோல அந்தப் பெட்டியில் கூட்டமே அதிகமில்லை. வேறு இடத்தில் அவர் தாராளமாய் உட்கார்ந்திருக்கலாம்! ஆனால் அவர் அந்த மூலைக்குத் தான் வந்தார். ஏனோ?

சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அவர் ஏதோ பேசணும் என்ற அவாவுடையவர் போல, "உங்கள் குழந்தையா?" என்றார் ரஹ்மானைப் பார்த்து.

அந்தக் கேள்வி அவனைச் சிறிது துணுக்குறச்செய்தது. அவருக்கு அந்தச் சிறுமியை தெரியுமோ?

ஆனால் அவர் முகபாவத்தினால் தைரியமடைந்த ரஹ்மான் தயங்காமல் "ஆமாம்!" என்றான் உடனே.

அவர் அடுத்தாற்போல என்ன கேட்பாரோ, என்ன செய்வாரோ என்ற பயம் அவனை அணுக, அவன் நெஞ்சு சிறிது படபடத்தது.

ஆனால் அவர், "நீங்கள் உங்கள் குழந்தைக்குப் பாவாடை அணிவிப்பீர்களா? நீங்கள் உங்கள் மதப்படி தொப்பியும் லுங்கியும் அணிந்திருக்க,...... குழந்தைக்குப் பாவாடை கட்டியிருக்கிறீர்களே, இந்துக்கள் வழக்கப்படி. அது ஏன் அப்படியோ?" என்றார்.

அவர் கேட்ட கேள்வியினால் அவன் திடுக்கிடவில்லை. கிழவர் சகஜமாகத்தான் கேட்கிறார் என்றுணர்ந்த அவன் துணிவுடனேயே "ஆமாம் சார்! இவளை இந்துப் பெண் போலத்தான் வளர்க்கிறேன். இந்தப் பக்கமே சிறு வயது முதல் வளர்ந்தவன் நான். இந்துப் பெண்ணையே கல்யாணமும் செய்து கொண்டேன்..... பிராமணப் பெண் அல்ல. ஆனால் என் துரதிர்ஷ்டம் போன வருஷம் அவள் இறந்துவிட்டாள். அவள் இறக்கும்போது, "குழந்தையை இந்துப் பெண்ணாகவே வளர்த்து வாருங்கள் என் நினைவாக!" என்றாள். அதுதான் காரணம் ஸார்!" என்று ஒரு கற்பனை விவரத்தைக் கூறி முடித்தான் ரஹ்மான். குழந்தை அப்போது தூங்கிக் கொண்டிருந்தது, எத்தனை நல்லதாயிற்று! இல்லாவிட்டால், அவள் ஏதாவது ஒன்றுக்கொன்று சொல்லியேயிருப்பாள். குழந்தைதானே?....

ஆ! அவனுக்கு அல்லாவின் அருள் அப்போது உண்மையாக இருந்தது. அவனுக்குச் சாதகமாகவே எல்லாம் நடந்தனவே!

மறுநாள் பொழுது புலர்ந்ததும், ஒரு பழஞ் சத்திரத்தில் கண் விழித்த குழந்தை.... அப்பா! அப்பா! எங்கே!' என்று கேட்டுக்கொண்டே எழுந்தாள்.

அரைகுறையாக விழித்த அவளுக்கு வீட்டிலிருப்பதாக எண்ணம்! ஒரு கோணிச் சாக்குப் பையில் ஏதோ வைத்துக் கொண்டிருந்த ரஹ்மான் திடுக்கிட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, "பாப்பா! அப்பா இன்னும் உன் மேலே கோவமாயிருக்காரு! இப்போ நாம்ப போக வேண்டாமம்மா! என்கிட்ட இரு நீ! நான் எல்லாம் தரேன் உனக்கு! நான் கோவிச்சுக்கவே மாட்டேன் உன்னை! என்றான்.

'ஓ! சரி மாமா! சரி, இருக்கேன்! ஆனா! சச்சு வீட்டுக்குப் போய் தலைப்பின்னிண்டு, பள்ளிக்கூடம் போகணுமே!" என்றாள் குழந்தை.

"பள்ளிக்கூடம் லீவாம், பாப்பா! சச்சுகூட, பாட்டியோட ஊருக்குப் போய்ட்டாளாம் ரயில்லே! நாம்கூட நேத்துமாதிரி போலாமா ரயில்லே! நேத்துப் பார் ரயில் எப்படி ஓடித்து, எங்கே ரயில் எப்படி போச்சு சொல், பார்க்கலாம்!" என்று ரஹ்மான், குழந்தையின் கவனத்தை வேறுவிதமாகத் திருப்பிவிட்டான்.

குழந்தையும், "இதோ பார் மாமா! ரயில் முதல்லெ குப்-குப்-குப்னு போச்சு! அப்புறம் குடுகுடுன்னு-குபுகுபுகுபுன்னு ஓடித்து! எனக்குத் தலையை வெளியிலே நீட்டவே முடியல்லை! அப்புறம் - யாரோ ஒரு பையன் - எங்க குப்பன் மாதிரி.... கையிலே கம்பு வச்சுண்டு நின்னுண்டிருந்தான். அவன் ரயில் போறபோதே என்னைப் பார்த்து கம்பு ஆட்டினான். 'ஓ!' என்று கத்தினான். அப்புறம் ரயில் ஊன்று ஊதித்து!"

அவன் அப்படியே விளையாட்டிலும் பேச்சிலும் ஆழ்ந்தான், தின்பண்டங்கள் கொடுத்தும், அன்புறப் பேசிக் கொஞ்சிக் கொண்டும் அவளைக் கவனித்து வந்த ரஹ்மானின் அக்கரையான செய்கைகள் பலனளிக்காமலில்லை!

காலை எட்டு, எட்டரை மணிக்கெல்லாம் அவன் சென்னைக்குப் பயணமானான் குழந்தையுடன்!

ரயிலில் ஒருவரும் அருகே இல்லாத சமயம் பார்த்து ரஹ்மான் "பாப்பா! உன் பேரென்னம்மா!" என்று கேட்டான். "என் பேர் அலமு! ஆனால் பள்ளிக்கூடத்திலே அலமேலுன்னு கூப்பிட்டாத்தான், நான் 'ப்ரெசன்ட் சார்'ன்னு சொல்வேன்!" என்றாள் அலமு.

"ஓ! அலமுவா! நான் உன்னை எப்படிக் கூப்பிடப் போறேன் தெரியுமோ?"

"அலமுன்னுதான் கூப்பிடுவே! ஆனா....மாமா, அது வேண்டாம் மாமா! என்னை "ஜில்லி"ன்னு கூப்பிடு மாமா!....எங்க ராஜுவாத்திலே, "ஜில்லி"ன்னு ஒரு நாய் இருக்கு! அதுக்கு பிஸ்கோத்து எல்லாம் போடுவா! எனக்குக்கூட 'ஜில்லி'யாயிருக்கனும்னு ஆசை! நீ நேத்து எனக்கு பிஸ்கோத்து பக்ஷணம் எல்லாம் நிறைய தந்தையோன்னோ நானும் ஜில்லியாயிட்டேன்! "ஜில்லி"ன்னே கூப்பிடு மாமா!" என்றாள்.

'ஐயோ பாவம்!' என்று எண்ணிக்கொண்ட ரஹ்மான், "வேண்டாம், பாப்பா! ஜில்லின்னு நாய்க்குத்தான் பேர் இருக்கும். நாய் குலைக்கும், பயமுறுத்தும், நீ சமத்தாச்சே! உனக்கு அந்தப் பேர் வேண்டாம். நான் உன்னை 'அல்லி'ன்னு கூப்பிடறேன்! அது ஜில்லி மாதிரிதானே! என்றான்.

"உம்! அப்படியே கூப்பிடு மாமா! அதுவும் ஜில்லி மாதிரிதான்! அல்லி!.... அல்லின்னா நன்னாருக்கு!" என்று தன் இரு கைகளைத் தட்டிக் களித்தவண்ணம் கூறினாள் அவள்!

அல்லாவின் அருளால் தனக்குக் கிடைத்த அந்தக் குழந்தைக்கு, ஒரு தகுந்த அழகிய பெயர் சூட்ட, முதல் நாள் இரவு அவன் சில யோசனைகள் செய்தும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

மறுநாள் அவள் அலமு என்ற சொந்தப் பெயரைச் சொல்லிவிட்டு, உடனே "ஜில்லி" என்று கூப்பிடச் சொன்னதும், அவன் மனதில் சட்டெனத் தோன்றிய சிறு பெயர் அல்லியே!

** ** **

அல்லிமலர் போன்ற உடல்நிறம் கொண்ட அந்தக் குழந்தை அல்லி!யானது ரொம்ப சரி! சொந்தப் பெயரின் முதல் எழுத்து 'அ'வும் அவள் விரும்பி 'ல்லி' சப்தமம் சேர்ந்தால் அல்லி! அல்லாவின் அன்பளிப்பு அல்லி! ஆ! பேஷ்! தன் விருப்பமும் குழந்தையின் விருப்பமும் தோதாகவேயிருக்கின்றன!

இந்தச் சம்பாஷணைக்குப்பின் ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றபொழுது, ரஹ்மான், 'பாப்பா! உனக்குத் தாகமாகயிருக்கா? தண்ணீர் வேணுமா!" என்று கேட்டான்.

"மாமா! என்னை அல்லின்னு கூப்பிட்டாத்தான், ஏன்னு கேட்பேன்!"

"ஆம்! ஆம்! அல்லி! தண்ணீர் வேணுமா சொல்லு!"

"எனக்கு வேண்டாம், மாமா! தாகமில்லை!"

"சரி! ஆனால் அல்லி! நீயும் என்னை மாமான்னு கூப்பிடாதே! பாபான்னு கூப்பிடு! எங்கே சொல்லு பாபா . . பாபா"

"ஓ! பாபா! பாபா! பாபா! பாபாவா! நீ என்னைப்போல் பாப்பான்னு கூப்பிடக்கூடாது! ஆனால் நான் உன்னை பாபான்னு கூப்பிடுவேன்!" என்று கை கொட்டிச் சிரித்தாள் அல்லி!

ஏதோ அலாதி சாந்தி ஏற்பட்ட உள்ளத்தினாய் ரஹ்மான் பெருமூச்சுவிட்டான். தன் இன்பம் நீடிக்கும் கவலையை அடுத்து உணர்ந்தவனாய் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி அங்கே தெரியும் வெளி உலகத்தையே பார்த்தவண்ணமிருந்தான்.

"நான் தூங்கணும் பாபா!" என்று கூறிய அல்லியின் வார்த்தைகளும் ஒட்டுதலையும் அவனை மறுபடியும் இன்பத்தின் சிகரத்துக்கே தூக்கிக் கொண்டு போய்விட்டன, சிறிது பொறுத்து.

"இதோ, இப்படி தலையை வச்சுக்கோ அல்லி!" என்றான் அவனும். சென்னையில் குழந்தையுடன் இறங்கிய ரஹ்மானுக்கு முதலில் சிறிது தோன்றிய கலக்கம், விரைவில் அகன்றது. தெளிந்த மனதினாய் கையில் இருந்த சிறிது பணத்தொகையுடன் குழந்தையை வைத்துக்கொண்டு மூன்று நான்கு நாட்கள், சௌகரியமாய்ப் பட்டணத்திலே திரிந்தான்.

சுற்றனதற்குப் பலனாக அவனுக்கு ஒரு ஜீவனோபாயமும் கிடைத்தது. ஒரு தையற் கடையில் உதவியாளராக அமர்ந்தான். சென்னையின் ஒரு கோடியில் ஒரு நெருக்கடியான இடத்தில் இருந்த அந்தக் தையற் கடைக்குச் சமீபமாக ஒரு சிறு அறையை ஒன்றரை ரூபாய் வாடகைக்கு அமர்த்தி, அதில் அல்லியுடன் குடியேறினான்.

ஒரு நாள் ரஹ்மான், தான் வாங்கி வந்த திண்பண்டங்களுடன் சிறிது மாமிசமும் கொணர்ந்து, அவளுக்கும் சிறிது கொடுத்தான். அதை வாங்கி, வாயருகில் கொண்டு போன அல்லி, 'ஐயோ, பாபா, நாத்தமாயிருக்கே! வேண்டாம்!' என்று தொப்பென்று போட்டுவிட்டாள். "சரி, வேண்டாம் வச்சுடும்மா! என்று அவனும் பகர்ந்தான். அவளை அப்போது வற்புறுத்தவில்லை அவன். நாளடைவில் அதைப் பழக்கிவிடலாம் என்று எண்ணினான்.

ஆனால் அன்று ஒரு விபரீதம் நடந்தது. அல்லி அந்த நாற்றத்திற்கே ஓயாது வாந்தி எடுக்கலானாள். சில மணி நேரங்களுக்கு அவள் முகமும் உடலும் அடைந்த மாறுதலைக் கண்டு, அவன் கண் கலங்கிப் போனான்.

ஆ! அல்லா! நானும் மாமிசம் புசிப்பதை அறவே ஒழித்து விடுகிறேன்! மாமிசம் புசிக்கணுமென்று இஸ்லாம் மதம் வற்புறுத்துகிறதா என்ன! இல்லையே! அஹிம்சை தான் உன் போதனையுன்றோ என்று அன்றே சபதம் செய்தான.

'அல்லி! உன்னை யார் எப்படி கண்டுபிடிக்க முடியும்!' என்றுதானே எண்ணியவாறு உள்ளம் பூரித்தான்.

ரொம்ப நாள் வரை ஒரே ஒரு அச்சம் அவன் உள்ளத்தில் சந்தோஷத்திற்கு மச்சமாக இருந்து வந்தது. 'இவள், அப்பா என்று திடீரென்று ஏங்கி விடுவாளோ என்ற பயம்தான் அது. அதற்காக அவன் அல்லியைத் தூக்கி கொண்டு, தினமும் பல இடங்களுக்குப் போய்ச் சுற்றி வருவான். அவள் மனம் பெற்ற தந்தையை மனம் நாடாத வண்ணம் செய்ய விரும்பினான். படிப்படியாக அவன் வெற்றியும் அடைந்து வந்தான்.

"ஆஹா, இந்தக் குழந்தையால் நமக்கு எத்தனை சந்தோஷம்! ஒரு வேளை இந்தக் குழந்தையை இழந்த தகப்பன் மனம் துயரத்தால் வெதும்புகிறதோ? என்று அவன் இரண்டொரு தடவை நினைத்தான். ஆனால் உடனேயே....

"அல்லிக்கு ஆதியிலிருந்தே தகப்பன்மேல் நாட்டமிருக்கவில்லையல்லவா? நடுக்கமும், பீதியுமே மேலோங்கியிருந்தன வன்றோ! அதிலிருந்து தெரிகிறதே, அந்த கிராதகத் தகப்பன் இவள்மீது வைத்திருந்த அன்பு எப்படிப்பட்டதென்று! அவன் இவள் விஷயத்தில் காட்டிய அலக்ஷ்யம்தானே, இவள் மனதில் தந்தை மீது அன்பு வேரூன்ற முடியாமல் போயிற்று! பெற்ற பாசம் அவன் மனது துடிக்கலாம் குழந்தை காணவில்லையே என்று! துடிக்கட்டும்! குழந்தையின் இளம் மனதை நோக வைத்த அவன் மனம்... பாரபக்ஷம் காட்டி இவள் மனதைப் புண்படுத்திய அவன் உள்ளம் துடிக்கட்டும்! இங்கே இவள் சந்தோஷமாயிருக்கிறாள், எனக்கும் இன்பம் ஊட்டுகிறாள்! நான் குழந்தையின் இதயத்தில் இடம் பெற்றுவிட்டேன், அன்பு செலுத்தி அவளுக்கும் எப்பேர்ப்பட்ட சலுகை நம்மிடத்தே! இனி இப்படியே இருக்கட்டும்!" என்று மனதை அலட்டிக் கொள்ளாமல் தேற்றிக் கொண்டுவிட்டான். அல்லியுடன் நல்வாழ்க்கை தொடங்கிய அவன், புதிதாக இல்வாழ்க்கை தொடங்கும் இளம்தம்பதிகள் அனுபவிக்கக் கூடிய ஆனந்தத்திலும் உயர்வான இன்பமும் அமைதியும் கண்டான்.

அவன் உதவி ஆளாக அமர்ந்த தையற்கடையில் அவன் கண்ணுங் கருத்துமாய் வேலை செய்யவே, விரைவிலே, அந்தக் கடையின் சொந்தக்காரரின் நன்மதிப்பைப் பெற்றான். கடையில் அமர்ந்திருந்த சோதரத் தொழிலாளர்களுக்குத் தலைவனாகவும் மாறினான் பிறகு, கையில் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டு, பிறகு தானே சொந்தத்தில் ஒரு தையல் மெஷினை வாங்கினான். சென்னையிலேயே சைதாப்பேட்டையில், ஒரு சிறுவீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அல்லியுடன் அதில் குடித்தனம் அமர்த்திக்கொண்டு, வாசற் திண்ணையிலேயேதான் தையற்கடையைத் திறந்து வைத்தான்.

'அலிபாபா' தையற்கடை' ஆரம்பித்த அவனுக்கு, அலிபாபாவுக்கு அடித்த அதிர்ஷ்டமே அடித்தது. இருபது வருஷங்களுக்கு முன் தொடங்கியிருந்த முதல் உலக மகாயுத்தம் முடிந்த பின் ஏற்பட்ட பலவிதப் பஞ்சங்கள், கஷ்டங்கள் எல்லாம் அறவே நீங்கியிருந்த காலம். நவநவமான நானாவித வஸ்துக்கள் எங்கும் மலிந்து கிடந்த காலம். சுமாரான வருமானமுள்ளவர்களும் சுகமாகவே வாழ்ந்து வந்த காலம்.

இப்போது நாகரீகமாக கருதப்படும் "சாதாக்கை" ரவிக்கைகளைப் பெண்கள் வெறுக்கத் தொடங்கியிருந்தது அப்போதுதான். 'பப் கைகளை விதவிதமாக சிருஷ்டித்து, ஏட்டிக்குப் போட்டியாக ரவிக்கை தினுசுகளை அணிவதில் ஆர்வம் கிளம்பியிருந்தது, மாதரிடை. அதற்கு ஒத்துழைக்கத் தையற்காரர்களாலேயே முடியும்! பெண்களின் நன்மதிப்பைப் பெற்று வருவாயைப் பெருக்கிக் கொண்டவர்களில் ரஹ்மானும் ஒருவன்.

அவன் வருமானம் உயர்வதற்கு பெண்களின் மதிப்பே காரணமாயிருந்தும், அவன் அந்தப் பெருமையைத் தன் பெண் அல்லிக்கே அளித்தான். அதிலும் நியாயம் உண்டு. அவன் மனதில் முதலில் ஒரு புதுமோஸ்தர் தைக்கத் தோன்றினால், அந்த மாதிரியில் முதன்முதலில் அல்லிக்குத்தான் தைத்துப் போடுவான். அவளுக்குப் போட்டுப் பார்த்து, குற்றங்குறைகள் இருக்கும்போல் தோன்றினால், அந்தக் குறை நீங்கும் வரை, அந்த மாதிரியைத் திருத்தியமைப்பான். அவள் உடலில் அந்த புது தினுசு ஆடை திகழும் அழகைப் பார்த்துக்கொண்டே உத்ஸாகம் பெருகியோட பிறருக்குத் தைத்துவிட ஈடுபடுவான்.

தன் வாழ்க்கையைச் சீர்படுத்த வந்த தெய்வக் குழந்தை என்று ஆதிமுதலே அவள் மீது அன்பு வளர்ந்து வந்த அவன் உள்ளத்தில் நாளடைவில் தனக்குச் செல்வமும், செல்வாக்கும் அளிக்கும் தனலக்ஷ்மி, தெய்வமங்கை என்ற எண்ணமும், உவகையும் கூட மேலோங்கலாயின.

அல்லிக்கு பன்னிரெண்டு வயது வந்திருக்கும். அப்போது, அவன் அவளுக்கும் தன் தையற்கலையை நன்கு பழக்கியிருந்தான். ஆறேழு வயது முதல் அவன் தையல் வேலை செய்வதைப் பக்கத்திலிருந்து கண்காணித்து வந்தும், பிறகு சிறுசிறு பணிகளில் அவனுக்கு உதவி செய்தும் வந்த அல்லிக்கு, வெகு எளிதில் அதில் தேர்ச்சியடைந்து தன் திறமைகளைக் காட்ட முடிந்தது. ரஹ்மான் அவளுக்காகவும் ஒரு தையல் மெஷினை வாங்கித் தந்து அவளுக்கு அதிலே ஊக்கம் அளித்தான்.

வீட்டிற்கு உட்புறமாக மெஷினை வைத்துக்கொண்டு, தையல் வேலை செய்தாள் அவள். பாபாவிற்கும், தனக்கும் சமையல் வேலையையும் கவனித்து வந்தாள். வீட்டுப் பொறுப்பை, விவரம் தெரிய வந்ததும் ஏற்றுக்கொண்டுவிட்டாள். ரஹ்மானின் சிறு வீட்டில், லக்ஷ்மி களை தாண்டவமாடத் தொடங்கியது.

அல்லி வீட்டில் பொறுப்பை ஏற்று அவளுக்குப் பலவிதமாக அனுசரணையாக இருக்கத் தொடங்கிய சில மாதங்களுக்குப் பிறகு, இன்னொரு குறிப்பிடத்தக்க மாறுதலும் உண்டாயிற்று. அல்லி அகத்திற்குள்ளேயே இருப்பாள், வெளியே அதிகம் வருவதில்லை. இந்த மாறுதலை ரஹ்மான் கவனிக்க நாளாகவில்லை; நாலைந்து தடவைகள், அவள் தன்னுடன் வெளியே வரச் சாக்குப்போக்குச் சொன்னதில் தெரிந்துவிட்டது.

ஒருநாள் வாய்திறந்து காரணம் கேட்டான் ரஹ்மான். "அல்லி! என்னோடு வெளியே ஏன் வரமாட்டேனென்கிறாய்!" என்றான்.

அதற்கவள், "பாபா! இந்தத் தெருவிலே மூன்றாவது வீட்டில் இருக்கிறாளே பாட்டி, அவள் என்னிடம் சொன்னாள், 'நம்ம குலாசாரம் நமக்கு கோஷா உண்டு! உன் பாபா நீ வெளியே வருவதைப் பற்றி தடை சொல்லாவிட்டாலும் மற்றவர்களை உத்தேசித்து நீ வெளியே ரொம்ப வராதே!' என்று. அதுதான் பாபா, நான் வரத் தயங்குகிறேன்!... எனக்குப் புஸ்தகம் எல்லாம் இருக்கு பாபா, பொழுது போக! கஷ்டமாகவும் இல்லை! நீயே போய்விட்டு வா பாபா!" என்றாள்.

பாபா ஒன்றும் பேசாமல் அப்பால் சென்றுவிட்டான். தன் அல்லிக்கும் தனக்கும் இடையே பிளவு ஏற்படப்போகிறதா?..... இத்தனை நாள் குழந்தையாய் தன்னுடன் பிணைந்திருந்த அவள் இனிமேல் அப்படித் தன்னுடன் இருக்க முடியாதா?.....சே! என்று பைத்தியக்கார பிரமைகள்!....

அவள் தன்னுடன் வெளியே உலாவ வராததால் என்ன மோசம்? ஒன்றுமில்லை!

'ஆனால் இதுமட்டும் வேடிக்கையாயிருக்கிறது. ஆமாம், விசித்திரம் கூட. அல்லியுடன் தன் வாழ்க்கை தொடங்கிய நாட்களில் அவன் மனம் அவளை வெளியே எடுத்துச் செல்வதை ஆக்ஷேபித்ததுண்டு! யாராவது தன்னிடமிருந்த குழந்தையைக் கண்டுகொண்டு தன்னிடமிருந்து பிரித்துவிடுவார்களோ என்ற பயம் அவனுக்கு! எனினும் அவளை அப்போது உள்ளே பூட்டி வைக்க மனமில்லை! சுதந்திரமாய் வெளியுலகத்திலேயே சஞ்சரித்த குழந்தையை உள்ளே வைத்து அடைத்துச் சாத்தினால் அவள் மனம் ஒரே வெறியாகப் பிறந்த ஊரை நினைத்து ஏங்காதா? தந்தையையும் நேசித்து வந்த சிநேகிதப் பெண்களையும் மறக்கடிக்க, அவளை பற்பல இடங்களுக்கு அழைத்துச் சென்று களிப்பூட்டுவதன்றோ உசிதம்! கொடியவனான தனக்கு நற்கதியளிக்கத் திருவுளங்கொண்ட அல்லா, மனமுவந்து தனக்கு அல்லியை அளித்திருக்கிறார். கருணை மிகுந்த அல்லா, தன்னிடமிருந்து பிடுங்கிக்கொள்வாரோ, தான் கொடுத்த பரிசை!" என்ற துணிபு அவனுக்கு அப்போது ஏற்படத்தொடங்கியதுமே, அவன் தன் மனதிலே அவ்வப்போது எழுந்த அச்சத்தையும் லட்சியம் செய்யாது, அவளைத் தான் சுற்றும் இடங்களுக்கெல்லாம் கூட்டிப் போய் வந்துகொண்டிருந்தான்!

இப்போதோ அவன் மனதில் எள்ளளவேனும் தயக்கமும் அச்சமும் இல்லை! ஆனால் இப்போது தான் அல்லி கோஷாப் பெண்ணாக மாறத்தொடங்கினாள். தன் கட்டளையின்றியே துருக்கப் பெண்களின் இந்தத் தனி வழக்கத்தைப் அவள் பின்பற்றுகிறாள்! என்ன விந்தை!' இப்படி யோசனைகள் செய்து கொண்டே சென்றவன், "அவள் அசல் துருக்கப் பெண்ணாகவே போகிறாள்! போகட்டும், வெயிலிலும் புழுதியிலும் என்னுடன் சுற்றாமல், மேனியழகு கெடாமல் வளரட்டும்!" என்று சமாதானம் செய்துகொண்டான் மனதை!

சிறிது பொறுத்து மீண்டும் அவளைப் பற்றி யோசனைகளில் திரும்பியது அவன் சிந்தனை. ஒரு திடுக்கிடும்படியான ஆலோசனை பிறந்தது!

"விதியின் விளையாட்டை யார் கண்டது! அவளை யாராவது கண்டுகொள்வார்களோ என்று நான் பயந்த நாட்களில், என்னிடமிருந்து அவளைப் பிரிக்காத தெய்வம், நான் தைரியமாயிருக்கும் இந்த சமயத்தில், யாராவது அல்லியைக் கண்டுபிடித்து எடுத்துப் போக உதவினால்! அவள் தன் பெற்ற தாயின் அச்சாக இருக்கலாம். இவள் பருவத்தில் வளர்ந்து வருவதில், தன் தாயின் அச்சாக இருப்பதைப் பார்த்து, இவளுடைய முதிய தகப்பன், பெண்ணை இழந்த அருமை உணர்ந்தவனாய் தேடப்புறப்பட்டவன், இப்போது எங்காவது இவளை என்னுடன் காணும்போது . . .

"ஐயோ, பத்து வருடங்களுக்கு முன் காணாமற்போன என் நான்கு வயதுப் பெண் அலமு இவள்!" என்று கூறுவாராயின், என் முகபாவங்கள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடும்! அவள் என்னைப் பிரியலாம்!....ஆம்! அப்படி ஏதாவது நடக்க நேரலாம்!... தெய்வீகக் கதைகளில் தெய்வம் தீயவனொருவன் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த அவனிடம் சில காலம் இருந்துவிட்டு, அவன் சன்மார்க்கத்தில் புகுந்ததும், அவனை விட்டு அகலுவதுபோல,

என் அல்லியும், என்னை நல்வழிப்படுத்தியதால், தன் கடமை தீர்ந்தது என்று என்னைப் பிரிந்தால்! பட்டிணத்தடிகளின் பிள்ளை அப்படித்தானே செய்தான்! அதுபோல என் தெய்வம், அல்லியும் அப்படிச் செய்துவிடுவாளோ! ஐயோ! கூடாது! அவள் பத்திரமாக உள்ளேயே கிடக்கட்டும்! வெளியே வரமாட்டேன் என்றால், அதற்காக, 'உள்ளேயே இரு!' என்றும் கண்டிக்கமாட்டேன். அதற்கு நான் தடை கூறவேமாட்டேன்!" என்று இறுதியில் உறுதி செய்து கொண்டான்; அதற்கப்புறம் அவன், அல்லி தன்னுடன் உலாவ வருவது நின்று போனதைப் பற்றி வருந்தவேயில்லை. இந்த நிலையில் அல்லியின் 'பர்தா' சௌகரியமாகத்தான் இருந்தது. அவசியமான சமயங்களில் வெளியே வரவும் அவள் தயங்கவில்லை. அடிக்கடி, வாசலிலேயே திண்ணையிலேயே பாபாவின் மெஷினுக்கருகிலேயே இருந்துகொண்டிருக்கவுமில்லை. கூடுமானவரையில் உள்ளேயிருப்பாள், எப்போதாவது வாசலுக்கு வருவாள்.

இப்படியும் கிட்டத்தட்ட ஒரு வருஷம் பறந்துவிட்டது மறுபடியும் இப்போதுதான் சமீபத்தில் ஒரு பத்து நாட்களுக்குள்ளாக ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அல்லியின் செயல்களிலும், மனப்போக்கிலும்கூட மாறுதல்களைக் கண்டுவிட்டான் அவன். எல்லாம் தெள்ளத் தெளிந்தது என்னவோ இன்றுதான் இந்த மாறுதல்தான் அவளுக்குச் சகிக்கக்கூடவில்லை. இதுநாள்வரை தோன்றாத மனச் சோர்வு உண்டாகிவிட்டது.

ஏழெட்டு நாட்களுக்கு முன்பு, அவன் செங்கற்பட்டுக்குத் காரியமாகப் போக வேண்டியிருந்தது. போகும்போது அல்லியிடம், "இன்று பகல் 'கண்ணன்'னு ஒருவர் வருவார்! அவர் துணிகளைப் பார்த்து எடுத்துக் கொடம்மா! பில்லும் பேரும் துணிகளோட இருக்கு!" என்று கூறிவிட்டுப் போனான்.

அவன் மாலையில் திரும்பி வந்ததும், உடைகளை மாற்றிக்கொண்டிருந்தபொழுது, அல்லி, அவனுடைய கேள்விக்குக் காத்திராமல், "பாபா! நீங்க சொல்லிப்போன மாதிரியே கண்ணன் வந்து துணிகளை வாங்கிப் போனார் பாபா!... அவர் இதற்கு முந்தி இங்கே தைக்கக் கொடுத்திருக்கிறாரோ, பாபா? நான் பார்த்ததில்லையே இதுவரை?' என்று பகர்ந்தாள்.

"உம்! இரண்டு மூன்று தடவை வந்திருக்கிறாரம்மா? அவர் என்ன சொன்னார் துணிகளைப் பார்த்து! கூலியைத் தந்துவிட்டாரா?" என்றாள் பாபா!

"ஓ! கொடுத்துவிட்டார் பாபா! ஏன் பாபா! போகிறபோது 'உன் பேர்தானா அல்லி!" என்று கேட்டார்! அவருக்கு என் பெயர் எப்படித் தெரிந்தது பாபா! நான் இதற்கு முந்தி அவரைப் பார்க்கவேயில்லையே!' என்று மீண்டும் அல்லி வினவ, ரஹ்மான் "அதுவா? அவர் முதலிலே நம்ம கடைக்கு வந்தபோது, "அலிபாபா" என்று உங்களுக்குப் பேரா? என்று என்னைக் கேட்டார். 'இல்லை ரஹ்மான்' என்றேன். 'அலிபாபா' தையற்கடைன்னு பெயரைப் பார்த்து என் பெயர்தான் அலிபாபா பேர்ன்னு நினைச்சாராம்! நான் அப்புறம் காரணத்தை விளக்கிச் சொன்னேன். "என் பெண் பெயர் அல்லி! அவளுக்கு நான் பாபா! இரண்டு பெயர்களும் சேர்ந்து அலிபாபான்னு வைத்தேன், என்று அவருக்குச் சொன்னேன்! அதுதான் அவருக்கு உன் பெயர் தெரிஞ்சிருக்கு! என்றான்.

"அப்படியா? அவருக்கு ஜோசியம்தான் தெரியுமாக்கும்னு நினைச்சுட்டேன் பாபா! அவரைப் பார்த்தாக்கூட ஏதோ ரொம்ப படிச்சவர், ஏதோ சக்தி அவர்கிட்ட இருந்ததுபோல நேக்குத் தோனித்து!.... 'கண்ணன்'னு ஒருத்தர் வருவார்ன்னு சொல்லிப் போனீர்களே, பாபா. அப்போது நான் என்ன நினைச்சேன் தெரியுமா, பாபா! சின்னப் பையன்களுக்கும் குழந்தைகளுக்கும் அந்தப் பெயர் நன்னாருக்கும், பெரியவாளுக்குப் பாந்தமாயிராதுன்னு நினைச்சேன் பாபா! ஆனால் அவர் வந்தப்புறம் இவருக்கும் அந்தப் பெயர் நன்னாயிருக்குன்னுதான் தோனித்து! கண்ணனுக்குக் கண்கள் எவ்வளவு பெரிசு! அவருக்கு அந்தப்பெயர் நன்றாகத்தானே பொருந்தியிருக்கு 'பாபா!' என்று கூறிமுடித்தாள் அல்லி.

ஆம்! அவளுக்குக் கண்ணனின் அழகான கண்களில், அப்போது அலாதிக் கவர்ச்சி ஏற்பட்டிருந்தது!

அல்லி கேட்ட கேள்விக்கு அப்போது ரஹ்மான், மனதில் ஒருவித சந்தேகமும் உணராதவனாய், "ஆமாம் அம்மா! ரொம்பப் பொருந்தும்! அழகான பெரிய கண்கள், அந்தப் பையனுக்கு!" என்றான்.

அவன் பதில் அல்லியின் ஆசைக்கினலுக்குத் தூபம் போட்டுவிட்டதோ!..... தான் அப்படிச் சொல்லாமல் இருந்திருந்தால்?....

ரஹ்மானும் கண்ணனைப் பற்றி உயர்வாகக் கூறவே, அல்லிக்கு அப்போது தன் மனதையும் உணர்ச்சிகளையும் நாவையும் அடக்கவே முடியவில்லைபோலும்!

ஆவலுடன் அவன், 'மறுபடியும் எப்போது வருவார், பாபா! அடிக்கடி துணிகள் தைக்கக் கொடுக்கிறாரோ? என்றாள்.

"அடிக்கடி தருவதில்லையம்மா! இப்போதுதான். இந்த யுத்தம் வந்தது முதற்கொண்டு கிராக்கி! ரேஷன் வேறே வந்துடுத்து! நினைத்தால் துணி வாங்கித் தைக்கக்கூடிய காலமில்லையே! இப்போதே என்ன கொடுக்கப்போகிறார்? இரண்டு மாசத்துக்குள்ளே மூன்று தடவை வந்திருக்கார்! இன்னும் இரண்டு வாரம் செல்லும் அவர் வர!" என்றான் ரஹ்மான், அப்போதும் லவலேசமும் சந்தேகம் இல்லாதவனாய்.

ஆனால்..... என்ன ஆச்சர்யம்! அல்லியின் மானஸீகமான அழைப்பு கண்ணனுக்கு எட்டியதோ!

இரண்டே நாட்களுக்குப் பிறகு அதாவது ஐந்தாறு நாட்களுக்கு முன்புதான் - வாசலிலிருந்து 'ரஹ்மான் சாயபு' என்ற குரல் கேட்டு ரஹ்மான் விரைந்து சென்றான்.

கண்ணனின் நா 'ரஹ்மான்' என்று அழைத்ததே ஒழிய, அவனது கண்களும், உள்ளமும் அல்லியைத் தேடியே வந்தன என்பதை ரஹ்மான் எப்படி அப்போது அறிவான்? வெளியே வந்த ரஹ்மான், "அட, நீங்களா?" என்று வியப்புடன் கண்ணனை வரவேற்று அங்கிருந்த பெஞ்சிமேலே உட்காரச் செய்துவிட்டு 'கையிலே பொட்டளம் என்ன சார்! துணிகள் தைத்தது சரியாயில்லையா?" என்று கவலை தொனிக்கக் கேட்டான்.

"நல்ல சந்தேகம் உங்களுக்கு, சாயபு! நீங்கள் தைப்பது சரியில்லாமல் இருந்ததுண்டோ எப்போதாவது! உங்களுக்கு ஏன் உங்கள் திறமையிலேயே அவ்வளவு சந்தேகம்? அதெல்லாம் ஒன்றுமில்லை! இன்னும் துணிகள் தைக்கக் கொணர்ந்திருக்கிறேன். அவ்வளவுதான்! என் சிநேகிதர்களுக்கெல்லாம் என் 'ஷர்ட்டு பாண்டு' தைச்சிருக்கிற மாதிரி ரொம்பப் பிடிச்சிருக்கு! யார் தைத்தது என்று கேட்டார்கள். கொடுங்கள் துணியையும் அளவையும், நானே கொடுத்துவிட்டு வருகிறேன் என்று வாங்கிவந்தேன் என்று கண்ணன் கூறிவிட்டு மூட்டையிலிருந்த துணிகளைப் பிரித்துப் போட்டான்.

அவனுடைய பேச்சுக்குரலைக் கேட்டுத்தான் போலும், அல்லி வாயிற்படியில் காட்சியளித்தாள். கண்கொட்டாது கண்ணனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அல்லியைக்காண கடைக்கண்களால் உள் வாசற்படிப் பக்கமாக அடிக்கடிப் பார்வையைச் செலுத்தி வந்த கண்ணன், அவள் வந்ததும் வெட்கத்தால் பார்வையை அங்கே ஓட்டுவதை நிறுத்தினான். இந்தச் சந்தர்ப்பம் அல்லிக்குக் கண்ணனைக் கவனிக்கப் பயன்பட்டது!

ரஹ்மான், துணிகளையும் அளவுத் துணியையும் வைத்துக் கொண்டு அவற்றை ஆராய்ந்து கொண்டிருந்தவன், கண்ணன், அல்லி இவருடைய கண்களும் காட்டிய புது மாறுதலைக் கவனிக்கவில்லை. ஓரிரண்டு தடவைகள் அவர்கள் கண்கள் சந்தித்துவிட்டதால் அவர்கள் முகம் வியர்த்து ஜொலித்ததையும் அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

துணிகளை அளவு பார்த்து முடிந்ததும், கண்ணன் அங்கிருந்து எழுந்துவிடவில்லை. துணிகளைப் பற்றி அவற்றின் விலைகளைப் பற்றி, உயர்வு தாழ்வைப் பற்றி, அருமை சிறுமைகளைப் பற்றி ஏதேதோ பேசினான் ரஹ்மானுடன்.

'காதல்' என்னும் பொல்லாத உணர்ச்சி எத்தனைவித அசட்டுக் காரியங்களை ஜாலக்காகச் செய்யும் சக்தியளிக்காது! உலகமறியாது, காட்டில் ஆசிரமத்தில் வளர்ந்த சகுந்தலை, துஷ்யந்தனின் அழகிய உருவத்தைத் தன் கண்களால் பார்த்துப் பருக, காலில் முள் தைத்ததாகப் பாவனை செய்து, தோழிகளுக்குப்பின் தங்கிவிடவில்லையா? கண்கள் மூலம் பேசாத பேச்சுக்களைப் பேசி மகிழ்ந்த காதலர்கள் எத்தனைபேர் இருந்ததில்லை? இப்போதும் எத்தனை பேர் இல்லை? காதல் பிறப்பதே கண்ணிலேதான். அதன் வாழ்வே கண்களிலேதான்.

கண்ணன் பேச்சை எப்படி எப்படியோ வளர்த்துக்கொண்டே போனாலும், நிலைமையை கெட்டிக்காரத்தனமாகச் சமாளித்துக் கொண்டிருந்தான். அவசியமில்லா விஷயங்களைப் பேசினாலும், விஷயத்திற்கு விஷயம் சம்பந்தம் வைத்து, சம்பாஷணைக்கு ஒரு தொடர்பு இருக்கும்படியாகச் செய்தான்.

இந்தப் பேச்சுக்கிடையே, ரஹ்மான் வாசற்படியில் நின்றுகொண்டிருந்த அல்லியைக் கண்ணுற்றான். ஒருநாளும் இல்லாத புதுமையாக, அல்லி, தான் தொழில் சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது வெளியே வந்து நின்றது அவனுக்கு ஒரு கண்ணிமைக்கும் நேரம் வியப்பளித்தது - உடனே பெருமையும் சந்தோஷமும் ஆட்கொண்டன. புன்னகையுடனும், தளதளப்பான முகத்தில், அழகு நிரம்பிய கண்களின் வசீகரத்துடனும், பார்ப்பவர் கண்களைப் பறிக்கும் சௌந்தர்யம் நிம்பியவளாய் அல்லி நிற்பதைக் கண்டு அவன் மனத்தில் சந்தோஷம் கரைபுரண்டு ஓடியது. கடந்த நான்கு நாட்களில் அவள்_ மனதில் ஏற்பட்டிருந்த ஒரு புது மலர்ச்சி, அவளுடைய இயற்கையான அழகுக்கு மெருகு கொடுத்திருந்ததை அவன் அறிந்திராவிட்டாலும், புதுமையாக வாசலில் அல்லி வந்து நின்றதால் ஏற்பட்ட ஒரு சிறு வியப்பினால், அவன் அல்லியின் முகத்தைக் கூர்ந்து சில வினாடிகள் கவனித்ததில், அந்தப் புது அழகு அவனை என்றுமில்லாத பெருமையுடன் பேசத் தூண்டியது.

"சார், பாருங்கள்! இவள் இல்லாவிட்டால், நான் இப்படியெல்லாம் தைப்பதேது, பிறருக்குச் சந்தோஷமும் திருப்தியும் தருவதேது!.....இதோ போட்டுக் கொண்டிருக்கிறீர்களே, ஷர்ட்டு, இங்கே தைத்ததுதான் போலிருக்கே! உம்?" என்று கேட்டான் ரஹ்மான்.

'ஆம், சாயபு! இங்கே நீங்கள் தைத்ததுதான்! ரொம்பப் பொருத்தமான அளவு இது! இதையும், இதோடு தைத்த மற்றொன்றையும் போட்டுக்கொள்ளவே ரொம்ப ஆசையாக இருக்கும் எனக்கு!" என்றான் கண்ணன்.

ரஹ்மான் பெருமிதத்துடன், "இது யார் தைத்தது தெரியுமா சார்! அதோ அவள்! அல்லிதான் இதைத் தைத்தாள்! அன்றைக்குக் காலை நான் டவுனுக்குப் போகவேண்டியிருந்தது! இந்த இரண்டையும், வேறு சில ரவிக்கைகளையும் தைக்கக் கொடுத்து விட்டுப்போனேன்! நான் திரும்பிவருவதற்குள், 'டீக்'காக எல்லாவற்றையும் தைத்து, பொத்தான் துவாரங்களும் தைத்து முடித்திருந்தாள்!' எனவே, கண்ணன், "அட, அவள் இதெல்லாம்கூட தைப்பாளா? என்று கேட்டவண்ணம், துணிபுடனே நேருக்கு நேராக அல்லியைப் பார்த்தான். இவன் தைரியமாகப் பார்த்த சமயம், அல்லி கவிழ்ந்தாள்! ஆனால முகத்தில் அரும்பியிருந்த புன்னகை மலர்ந்து இருந்தது!

இவன் பார்த்த பார்வை, 'பார் நீ தைத்த, உன் கைகள் தீண்டித் தைத்த சட்டை, என் உடலை அணைத்திருக்கிறது! ஆ! என்ன சந்தோஷமாயிருக்கிறது எனக்கு!' என்று கூறியிருக்க வேண்டும்!

அவள் பார்த்த பார்வையும், உடனே நாணிக் கவிழ்ந்த வதனமும் 'ஆம்! ஆனால், உங்களுக்கு மட்டுமா சந்தோஷம்! எனக்கும் தான்!' என்று விடையளித்திருக்க வேண்டும்! அவன் அணிந்திருந்த சட்டை, அவளைத் தழுவுவது போல ஓர் இன்ப உணர்ச்சி அவன் உடல் நரம்புகளூடே பாய்ந்து அவனைப் பரவசப்படுத்தியது போலும். ஒரு அலாதி துருதுருப்புடனே கண்ணன் ரஹ்மான் அடுத்துக் கூறி வந்த வரலாற்றைக் கேட்டுக்கொண்டு வந்தான்.

"ஓ! அவள் எல்லாம் தைப்பாள் சார்! பேஷாகத் தைப்பாள்! சார்! பேஷாகத் தைப்பாள்! அவள் எனக்குத் தையல் வேலையிலும் நிரம்ப ஒத்தாசை செய்கிறாள்! வீட்டையும் கவனித்து வருகிறாள்! இது மட்டும்தான் என்று நினைக்கிறீர்களா? படிக்கவும் படிப்பாள். நிறைய ஓரோர் நாள் விளக்கு வெளிச்சத்தில் தமிழோ உருதுவோ படித்துக்கொண்டிருப்பாள். நான் 'வேண்டாமம்மா! கண்ணுக்குக் கெடுதல், படிப்பு தையல் எல்லாம் சேர்ந்தால்!' என்று சொன்னாலும் கேட்கமாட்டாள். எல்லாம் ஆசை அவளுக்கு. உருது நானே சொல்லிக் கொடுத்தேன். முதலில் கொஞ்சமாக, அப்புறம் மேன்மேலே பால பாடப் புத்தகங்கள் வரிசைக் கிரமமாக வாங்கிப்போட்டேன், அவள் விருத்தியும் செய்துகொண்டுவிட்டாள். வீட்டுப் பொறுப்பை அவள் ஏற்பதற்குமுன், பன்னிரண்டு வயதுவரை, படிப்பு தையல்தான் அவளுக்குக் கவனம். எனக்குத் தெரிந்த தமிழை அவளுக்கும் சொல்லித் தந்து, உருதுக்குப் போலவே அதற்கும். விருத்தி செய்ய புஸ்தகங்களாக வாங்கித் தந்தேன்."

"எனக்கு இந்து மதம் என்றால் வெறுப்பு கிடையாது. இங்கேயே சிறுவயதுமுதல் பழகி வந்து, தமிழையே பள்ளியில் படித்தவன் நான். எல்லாவிதமான புஸ்தகங்களையும் வாங்கிப் போட்டுவிடுவேன். கிருஷ்ண லீலையில் கிருஷ்ணன் லீலைகள் ஒன்றுவிடாமல் தெரியும் இவளுக்கு. ராமாயணம், பாரதம் கதைகள் சுருக்கமாகத் தெரியும். குமரப் பெருமான், சிவன் இவர்களைப் பற்றிப் பேஷாகத் தெரியும். எங்கள் மதத் தலைவர்களைப் பற்றியும் கேட்டால் சொல்வாள்!" என்று முடித்தான் ரஹ்மான்.

கண்ணன் ரஹ்மான் கூறியதைக் கேட்டு, "அப்படியா, ரொம்ப நல்லது, நீங்கள் கையாண்ட முறை, சாயபு! குறுகிய மனப்பான்மையே இராது! பெருந்தன்மையான மனசும் குணமும் உங்களைப் போலவே அவளிடமும் படிவதில் சந்தேகமென்ன!" என்றான். அல்லியை மறுபடியும் தைரியமாகப் பார்க்க எண்ணித் திரும்பினான்.

ஆனால் அல்லியைக் காணோம் உள் வாசற்படியருகில்! ரஹ்மான் தன்னைப் பற்றி கண்ணனிடம் புகழ்வதைக் கேட்டுக்கொண்டிருக்க வெட்கமாயிருந்தபோலும், உள்ளே ஓடிவிட்டாள். அவள் மறைந்தது கண்ணனுக்குக் கஷ்டமாயிருந்தாலும், அந்த வேதனையிலும் ஒரு இன்பம் உணர்ந்தவனாய் ரஹ்மானின் பேச்சிலும் அல்லியின் வரலாற்றைக் கேட்பதிலும் சந்தோஷமாக ஈடுபட்டான்.

சிறிது பொருத்துப் பிரிய மனமின்றி அவ்விடம் விட்டுப் பெயர்ந்தான்.

ரஹ்மான் அல்லியைப் பற்றியும், அவள் அறிவுத் திறமையைப் பற்றியும் கண்ணனிடம் கூறியதால், அவர்களிருவரிடையே தோன்றியிருந்த கவர்ச்சி விதையை நன்றாக வேரூன்றச் செய்துவிட்டு சாரம் பாய்ச்சிவிட்டான் என்பதை அவன் அன்றே உணராமல் போனது என்ன விந்தை!

அதற்கு மறுநாள் ரஹ்மான் நூற்கண்டுகள் வாங்கி வர கடைக்குப் போனவன் வீடு திரும்பியதும், "அல்லி! இங்கே ஓடிவா!" என்று கூப்பிட்டான்.

ஆவல் நிறைந்தவளாய் ஓடி வந்த அல்லியை ரஹ்மான் பரிவுடன், "அந்த வெள்ளி டோலக்கை எடுத்துவிடம்மா, ஒரு புது மாதிரி வாங்கி வந்திருக்கிறேன், 'ஸ்டட்' என்று பெயராம் இதற்கு. உனக்கு நன்றாயிருக்கும்?" என்று கூறியவாறு, தானே அவளுடைய பழைய காதணியை நீக்கிவிட்டு, புதியதை அணிவித்தான்.

பெரிய சிகப்பு ஒற்றைக்கல் பதித்த அந்த காதணி, அவள் செவிகளில் அழகுடன் திகழ்வதை ஒரு தரம் திருப்தியுடன் பார்த்துவிட்டு, ரஹ்மான், "பார் அல்லி, நான் நினைத்த மாதிரியே ரொம்ப அழகாக அமைந்திருக்கு! கண்ணாடியில் நீயே பார்த்துக்கொள்! பொன் கலர் ரவிக்கைக்கு கைப்பக்கம் பளிச்சென்று இரண்டு சிவப்பு பொத்தான்கள் வைத்தால், எப்படி சோபிக்குமோ அப்படியிருக்கு!" என்றான்.

"ஓ! ஆமாம், பாபா! நன்றாயிருக்கு! பாபா பார்த்தேளோ! அந்தக் கண்ணன் முகத்திலே, கண்ணுக்குப் பக்கத்திலே பொட்டுக்கிட்ட ஒரு சிவப்பு மச்சம் 'பிரஸ் பட்டன்' அவ்வளவு பெரியதாக இருக்கே பார்த்தேளா!" என்றாள்.

"கவனிக்கவில்லையே, உம்! இருக்கு, பார்த்த ஞாபகமாயிருக்கு! நீ சொன்னதும் தெரிகிறது! என்ன ஞாபக சக்தி உனக்கு!" என்றான் ரஹ்மான்.

கண்ணன் முகத்தையே இரவு பகல் தியானிக்கத் தொடங்கியிருந்த அல்லிக்கு, அவன் முகத்தையே உற்றுக் கவனித்து அவன் உருவத்திலிருந்து தன் கண்களை அகற்ற விரும்பாத அல்லிக்குக் கண்ணன் முகத்திலே அழகுக்கு அழகு செய்வதுபோல துலங்கிய அந்த அழகிய சிகப்பு மரு, எப்படி நினைவில்லாமல் போகும்? ரஹ்மானுக்கு கண்ணன் பல வாடிக்கைகாரர்களில் ஒருவராயினும், அல்லிக்கு கண்ணன், ஸர்வ வியாபியான தெய்வம்போல தோன்றினானே!

ரஹ்மான் அப்போதாவது ஏதாவது உணர்ந்தானா, இல்லை! அப்போதே "ஏன் இவள் கண்ணனைப் பற்றி அடிக்கடி பேசுகிறாள்!' என்று நினைத்திருக்க வேண்டிய அவனுக்கு, அன்று இரவுதான் சந்தேகமே பிறந்தது.

அன்றிரவு அல்லி தானாகவே கண்ணனைப் பற்றிப் பேச்செடுத்தாள். அவனைப் பற்றிப் பேச சந்தர்ப்பம் சிறிதும் இல்லாதபோது, அவள் அந்த பிரஸ்தாபத்தை எடுத்ததால்தான், ரஹ்மானின் உள்ளத்தில் சந்தேகம் தலை தூக்கியது.

** ** **

அல்லி, படுக்கையில் படுத்திருந்தவள், "பாபா!" என்று ரஹ்மானை கூப்பிட்டு, "கிருஷ்ணர் பேர்தான் கண்ணன்! ஆனால் அந்தக் கிருஷ்ணர் கறுப்பு. இந்தக் கண்ணன் வெளுப்பு! வெளுப்பாயிருப்பவர்கள்தானே கறுப்பானவர்களைவிட அழகு? இந்தக் கண்ணன் அவ்வளவு அழகாக, அந்தக் கண்ணன் கூட இருந்திருக்கமாட்டாரோல்லியோ?" என்று ஒரு எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்டாள்.

'இதென்ன கேள்வி!' என்று வியந்த ரஹ்மான், ஏதோ பதில் பேசணுமே என்று எண்ணியவனாய், "அந்தக் கண்ணன் சுவாமி தெய்வத்தின் அவதாரம்; அதனாலே அவர் கறுப்பாயிருந்தாலும், அவர் அழகு அலாதியாயிருந்ததாம்! அவர் முகத்திலே ஒரு பிரகாசம், கண்களிலே ஒரு அன்பு, கவர்ச்சி. இதெல்லாம் பிரதிபலித்ததனாலே, அவரைத்தான் எல்லோரும் விரும்பினார்களாம். கோபிகைகளுக்கு அவர் கறுப்பு என்றே தோன்றல்லை. எல்லோரும் அவர் அழகிலே சொக்கிப் போனார்கள்!" என்று பதிலளித்தான்.

அதற்கு அல்லி, "ஆனால் பாபா, இந்தக் கண்ணன் முகமும் பிரகாசமாயிருக்கே! கண்களில்கூட - இவரும் அந்தக் கண்ணன் மாதிரி தான் - எனக்குத் தோன்றது பாபா!' என்றாள்.

அப்போதுதான் ரஹ்மானுக்கு ஏதே ஒரு உண்மை புலனாவதுபோலபட்டது. ஒன்றும் தோன்றாதவனாய், "இருக்கலாம் அம்மா!" என்று மாத்திரம் அரைகுறையாகக் கூறிவிட்டு, "சரி, தூங்கம்மா! நாழியாச்சு பார்!" என்றான்.

அப்புறம் அவனாவது, அவளாவது பேசவில்லை. ஆனால் மனசும் அவர்களை நிம்மதியாகத் தூங்கவும்விடவில்லை!

மறுநாட்காலை சுமார் ஏழு மணிக்கு அல்லி அவனுக்கு 'டீ' தயார் செய்து கொடுத்துவிட்டு, "பாபா, பாரதியாருடைய எல்லாப் பாடல்களும் சேர்ந்து புஸ்தகம் இருக்கிறதாம், எனக்குப் படிக்கணும்னு ஆசையாயிருக்கு! ஒரு வேளை அந்தக் 'கண்ணன்' கிட்ட இருக்கலாம் கேட்டுப் பார்க்கிறேளா?" என்றாள்.

"ஆகட்டுமம்மா!" என்று மட்டும் விடையளித்த ரஹ்மான் ஏதோ யோசனைகளுடன் வாசலுக்கு வந்து கடையைத் திறந்தான்; அன்று தான், முதன் முதலாக, அவன் மனதில் உத்ஸாகம் குன்றத் தொடங்கினது.

"அல்லி என்ன நினைக்கிறாள்! அவள் மனம் என்ன நினைக்கிறது!" என்ற கேள்விப்புழு அவனைத் துளைத்துக்கொண்டேயிருந்தது. அன்று - நான்கு நாட்களுக்கு முன் ஆரம்பித்த அந்த மனக்கலக்கம்தான் - இன்று முற்றியிருக்கிறது.

ரஹ்மானும் அல்லியும் ஏதாவது பேசியிருக்கலாம், ஆனால் அவர்களுக்குத் தங்கள் உள்ளங்களிலே எண்ணற்ற யோசனைகள்; வெளிப்படையாகப் பேசக்கூடிய விஷயம் ஏதும் இருக்கவில்லை!

'இன்றும் இரண்டு நாட்களில் கண்ணன் வருவார். துணிகளைப் பெற்றுப் போக. அப்பொழுது அல்லியின் முகபாவங்களை நன்கு ஆராய வேண்டும்!' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்த ரஹ்மான்! 'சாயபு!" என்ற குரல் கேட்டுத் துணுக்குற்றுத் தலை நிமிர்ந்தான்.

"ஓ, என் துணிகளைத்தான் தைக்கிறீர்கள் போலிருக்கு!" என்று கூறியவாறே திண்ணை மீது வந்து நின்ற கண்ணனின் எதிர்பாராத வருகை, 'கண்ணன் மனதையும் ஆராயத்தான் வேண்டும் போலிருக்கு!' என்று ரஹ்மானை நினைக்கச் செய்தது.

"வாருங்கள், உட்காருங்கள்!" என்று வரவேற்புக் கூறி கண்ணனை பெஞ்சிமேல் அமரச் செய்யும்பொழுது, கண்ணனின் கண்கள் சென்ற திசையை ரஹ்மானும் நோக்கினான். அல்லியின் பக்கம் தான்! உட்கார்ந்திருந்த அல்லி, எழுந்து நின்று! தலைகுனிந்திருந்ததைக் கண்ணுற்றான்.

'கிழவி பர்தாவை அனுசரிக்கச் சொன்னதை, அல்லி மறந்தே விட்டாள் கொஞ்ச நாளாக!' என்று எண்ணமிட்ட ரஹ்மான், கண்ணனை நோக்கி, "என்ன சார், சமாசாரம்!" என்றான்.

"ஒன்றுமில்லை, வெறுமனே தான் வந்தேன். இந்த வழியாகப் போகவேண்டியிருந்தது. 'துணிகளைத் தைக்க ஆரம்பித்திருப்பீர்களே, எந்த மட்டும் ஆயிற்றோ பார்க்கலாமே', என்று கடையில் நுழைந்தேன், அவ்வளவுதான்! என்றான் கண்ணன்.

'ஓஹோ!' என்று குறும்புடன் அல்லியும், கோபத்துடன் ரஹ்மானும் நினைத்திருக்க வேண்டும். இரண்டுபேர் பார்வையும் கண்ணன் மேல் பதிந்தது!

வாசற்படியின் உட்புறம் நகர்ந்து கொண்ட அல்லி, "பாபா, அவரிடம் புஸ்தகம் கேட்கிறீர்களா?" என்றாள்.

"என்ன புஸ்தகம்?" என்று வினவியவாறு இருவரையும் மாறி, மாறிப் பார்த்தான் கண்ணன்.

"பாரதியார் பாடல்கள் அடங்கிய புஸ்தகம் வேணுமாம் அவளுக்குப் படிக்க! உங்களிடம் இருக்கிறதா? இருந்தால் கொடுங்கள். படித்த உடன் கொடுத்துவிடுகிறோம்!" என்றான் ரஹ்மான்.

அதற்குள் அல்லி உள்வாசற்படியைவிட்டு, ஓரிரண்டடிகள் முன்னே வந்து நின்றாள்.

"பாரதியார் பாடல் புத்தகமா? கொணர்ந்து தருகிறேன்! உனக்கு அவருடைய பாட்டு ஏதாவது பாடத் தெரியுமா? உனக்கு எந்தப் பாட்டுப் பிடிக்கும்! என்று அல்லியைப் பார்த்தே பேசத் தொடங்கினான் கண்ணன். அவன் முகத்தில் ஆவல் துள்ளியது.

"எனக்கு ஒரே ஒரு கண்ணன் பாட்டுத்தான் தெரியும்! ஆனால் பாடத் தெரியாது! எத்தனையோ கண்ணன் பாட்டு இருக்காமே, அதையெல்லாம் படிக்கணும் நான்!" என்று சலுகையோடு கண்ணனுடன் சம்பாஷிக்கத் தொடங்கிவிட்டாள் அல்லியும்.

"ஓ அப்படியா? என்று கூறியவாறே, ஒரு அர்த்த புஷ்டியுள்ள பார்வையையும் அல்லியின் மீது கண்ணன் வீசியதைக் கவனிக்கத் தவறவில்லை ரஹ்மான். ஆனால் ரஹ்மானின் நோட்டம் கண்டுபிடிக்கும் புதுப்பார்வையை அறியாத அந்த சிறிசுகளுக்கு ஒருவிதத் தயக்கமும் ஏற்படவில்லை. மனதை அரைகுறையாக வெளிப்படுத்திக்கொள்ள அவர்கள் தங்களையுமறியாமல் வேடிக்கைப் பேச்சுகளில் இறங்கிவிட்டார்களே!

"கண்ணன் பாட்டுத்தானோ உனக்கு இஷ்டம்! வேறு ஒரு பாட்டும் பிடிக்காதோ!" என்று கிண்டிக்கேட்டான் மேலும், கண்ணன்.

அல்லியோ, நாணமும், கவலையும் கலந்த குரலில், "இல்லை - அப்படியில்லை - ஏன் உங்களுக்குக் கண்ணன் பாட்டுப் பிடிக்காது?' என்றாள்!

"உஹூம், பிடிக்காது! எனக்கு பாட்டே பிடிக்காது! எனக்குப் பூக்கள்தான் இஷ்டம்! அதுவும்...."

அப்பா! என்ன குறும்பான பேச்சு! மனதைத் திறந்து கூற என்ன சாமர்த்தியமான அடிப்பாரம் போடுகிறான் பயல்!

"ஐய, நீங்கள் புருஷராச்சே! பூக்கள் மேலே ஆசையிருந்து என்ன பிரயோசனம்! தலையிலே வச்சுக்க முடியுமா?" என்று இடைமறித்துக் கேட்டாள் அல்லி!

"முடியாது தான்! ஆனால் அதைக் கையில் வைத்துக் கொண்டே பார்த்துக்கொண்டேயிருந்தால் சந்தோஷம் தானே! எனக்கும், இப்பப்ப உன் மாதிரி பிறந்திருக்கக் கூடாதா என்றுதான் தோன்றுகிறது!' என்று கண்ணன் பதில் கூறியபோது, கவனத்துடன் கேட்டுக்கொண்டு வந்த ரஹ்மானுக்கு என்னமோ செய்தது உடம்பை.

"உங்களுக்கு எந்தப்பூ பிடிக்கும்?" என்று மேலும் தொடர்ந்து கேட்டாள் அல்லி.

அவன் முன்பே கூற வந்த பதிலைச் சட்டென அளித்தான் கண்ணன். "எனக்கு 'அல்லிப்பூ' ..... அல்லித்தாமரை தான் ரொம்பப் பிடிக்கும்!" என்று சிறிதும் தயங்காமல் சொல்லிவிட்டான்.

தூக்கி வாரிப்போட்டது ரஹ்மானுக்கு! கடைசியில் கண்ணன் கூறிய இரண்டு வாக்கியங்களும், கண்ணன் மனதைச் சந்தேகமற அறிய உதவி செய்துவிட்டன!

'உன்னைப்போல் துலுக்கனாகப் பிறந்திருக்கக்கூடாதா நானும் என்று இப்பொழுது தோன்றுகிறது! உன்னை, அல்லியான உன்னைத்தான், எனக்குப் பிடித்திருக்கு! உன்னை அடைவதென்னமோ கஷ்டந்தான்! ஆனால் உன்னைப் பார்த்தாவது சந்தோஷப்படுகிறேன்!'

இதுதானே கண்ணனின் வார்த்தைகளின் மறைபொருள், உட்பொருள், அவன் உட்கருத்து! அதை வெளியிடத்தானே அவன் பாட்டுப் பிடிக்காது என்று பூக்கள் விஷயத்தில் பேச்சைத் திருப்பினான்! இல்லாவிட்டால் பாட்டுப் பிடிக்காதவன் இருப்பானா? பாரதியார் பாட்டை விரும்பாதவன்தான் இருப்பானா? பாட்டின் மேலே ஆசையாலேதான், முதலிலேயே "பாடத் தெரியுமா?" என்றும் அவளைக் கேட்டான்? அவள், 'கண்ணன் பாட்டுப் பிடிக்கும்,' என்று தன் உண்மை அபிப்பிராயத்தைச் சொல்லப்போக, இவன், இந்தக் கெட்டிக்காரப் பயல், மறுமொழியைத் தன் அந்தரங்கத்தை வெளியிட உதவியாயிருக்கும்படியாகச் செய்து கொள்ள, "பாட்டுப் பிடிக்காது!' பூதான் பிடிக்கும்" என்று கூறி விட்டு, "அல்லிதான் பிடிக்கும்!" என்று சொல்கிறானே! அதுவும் தன்னெதிரிலேயே!

'இவனும் தான் அல்லி மேலே.... '

இப்படியாக ரஹ்மானின் மூளை வேகமாக ஒரு கணத்தில் வேலை செய்தது. கட்டையில் நெருப்புக் கனிந்து கொண்டால், அடுப்பு எரிவது கஷ்டமா?

சுமார் கால் மணி நேரங்கழித்து கண்ணன் இருவரிடமும் விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் காலையிலேயே ஒரு புத்தகத்துடன் கடைக்குள் நுழைந்தான் கண்ணன். "சாயபு! இதை உங்கள் பெண் அல்லியிடம் கொடுங்கள்!" என்றான்.

ஒரு புத்தம் புதிய புத்தகம் பாரதியாரின் பாடல்களுடன் மனதைக் கவர்ந்தது. புத்தகத்தை ரஹ்மானே புரட்டிக்கொண்டிருக்கையில், புத்தகத்தில் உட்புறமாக இருந்த ஒரு வெள்ளைத் தாளில், முதல் பக்கமான அந்தத் தாளில் அவன் கவனம் ஊன்றிவிட்டது.

"எனது அன்பிற்குரிய தையற்காரர் ரஹ்மான் சாயபுக்கும், அவர் பெண் அல்லிக்கும் கண்ணன் அன்பளிப்பு' என்று முத்துப்போன்ற எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது!

தாளின் நடுவில் ஒரு படமும் லேசாகத் தீட்டப்பட்டிருந்தது. ஒருகோடிக் கரங்கள் - ஆடவனின் கரங்கள் மீது ஒரு அல்லிப் பூ. அந்தப் பூவின் மீது ஒரு புஸ்தகத்தை வைக்கும்

பாவனையாக, மேலேயிருந்து ஒரு புருஷக்கரங்கள் ஒரு புஸ்தகத்தைப் பிடித்திருப்பது போல் அந்தப்படம் வரையப்பட்டிருந்தது!

அதைப் பார்த்ததும்தான், ரஹ்மான், "இதென்ன சார்" என்றான் வியப்புடன். இதற்குள் அல்லி வாசலுக்கு ஓடி வந்தாள், படியருகே நின்று கொண்டிருந்தாள்.

"ஒன்றுமில்லை சாயபு! உங்கள் கையிலிருக்கும் அல்லிக்கு, என் கையிலிருக்கும் புத்தகத்தைக் கொடுப்பதாக ஒரு அர்த்தத்துடன் ஏதோ தெரிந்த வரையில் அதை வரைந்தேன், முகங்கள் வரைவதுதான் கஷ்டம், இந்தப் படங்கள் வரைவது கஷ்டம் இல்லை. கலியாணப் பத்திரிகைகளிலே இரண்டு ஜோடிக் கைகள் கைலாகு கொடுப்பதுபோல வரைந்திருக்கும் - ஏதோ அந்த மாதிரி - இதையும் வரைந்து வைத்தேன்! இந்தப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது நான் வாங்கிக்கொள்ள மாட்டேன்!" என்று கண்ணன் ரஹ்மானிடம் கூறவே, ரஹ்மான், "இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்!..... போகிறது.......என்ன விலையென்பதை....." என்று கூறி முடிக்கும் முன்னர், கண்ணன், "சாயபு! அதெல்லாம் கேட்காதீர்கள்! இந்தப் புஸ்தகமெல்லாம் விலை மதிப்பிட முடியாது, விலை கிடையாது! உங்கள் அல்லி இவற்றைப் படித்துக்கொண்டு, இந்த புஸ்தகத்தை வைத்துக்கொண்டிருப்பதே, எனக்கு இதன் விலையைக் கொடுப்பதாகும்!" என்று கண்டிப்புத் தொனிக்கும் குரலில் கூறிவிட்டு, 'நான் போகணும், வேலையிருக்கிறது, போய் வருகிறேன்!" என்று விடை பெற்றுக்கொண்டு, அங்கிருந்து நடக்கலானான்.

இன்னது செய்வது என்றறியாத ரஹ்மான் மெள்ள, அல்லியின் பக்கம் திரும்பி, "இந்தாம்மா, வச்சுக்கோ! படிக்கப் பரிசளித்தால் மறுப்பது எப்படி! அந்தப் பையன் ஆசைப்பட்டுக் கொடுப்பதை, வேண்டாம் என்று தடுக்கவும் முடியவில்லை!" என்று சொல்லிவிட்டு, தையல் மெஷினருகே நாற்காலியில் அமர்ந்தான்.

அல்லியும் ஒன்றும் சொல்லமாட்டாதவளாய், புஸ்தகத்தை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு, பிரித்துப் பார்த்த வண்ணமே உள்ளே போய்விட்டாள்.

"அன்பிற்குகந்த" என்று கண்ணன் தன் பெயருக்கு முன்னால் பொறித்திருந்தாலும், அதை அல்லியின் பெயரோடு பிணைக்கவே கண்ணனின் உள்ளம் விரும்பியிருக்கும் என்று ரஹ்மானுக்கு உள்ளுணர்வு வற்புறுத்திக் கூறிக்கொண்டே வந்தது!

அன்று மாலை மறுபடியும் கண்ணன் காட்சியளித்தான்!

"காலையில் சீக்கிரமாகப் போக வேண்டியிருந்ததால் போய்விட்டேன், சாயபு! அதற்காகத்தான் இப்போது சாவகாசமாக வந்தேன் காலேஜ் விடுமுறை நாட்கள் இன்றோடு முடிகின்றன, நாளை திறக்கிறார்கள்! அதனால்தான் இன்று இரண்டாம் தடவையாக வந்து விட்டேன்!!' என்றான் எடுத்த எடுப்பிலே.

இந்தச் சந்தர்ப்பத்தை கைவிட விரும்பாது ரஹ்மான், "காலேஜ் சார்த்தியிருந்ததா? உங்களுக்கு இந்த ஊரேதானோ, அல்லது...... படிப்பிற்காக இங்கு வந்தவரோ நீங்கள்? என்றான்.

"படிக்கத்தான் வந்தேன் இங்கே என்று சொல்லணும், என் தாய் தந்தையர் ஊர் சேலம்" என மொழிந்தான் கண்ணன்.

"எத்தனை நாள் லீவு உங்களுக்கு? விடுமுறை நாட்களுக்கு அப்பா அம்மா இருக்குமிடத்திற்குப் போகவில்லையா!"

"உஹூம், அதெல்லாம் போவது கிடையாது! ஏனென்றால், எனக்கு அம்மாவும் இல்லை அப்பாவும் இல்லை! என் சொந்தக்காரர் என்று சொல்லிக் கொள்ள ஒரு மாமாயிருக்கிறார்.... இன்னும் விவரம் சொல்கிறேன்!.... அப்பாவும் அம்மாவும் நான் சிறு பையனாயிருந்தபொழுது சேலத்தில் இருந்தது எனக்கு நினைவு இருக்கிறது! இரண்டு பேரும், ஒரே வருஷ வித்தியாசத்திலே இறந்துவிட்டார்கள்! மாமாவிடம் வளர்ந்து வந்தேன்.... ஆனால் கொஞ்ச காலத்திற்கப்புறம் மாமா இளையாளின் பேச்சுக்கெல்லாம் இடங்கொடுக்கவே என்னை ரொம்ப கொடுமைப்படுத்தத் தொடங்கினாள் அவள். நானோ

அப்போது 'ஸ்காலர்ஷிப்பி'லே படித்துக்கொண்டிருந்தேன் .....மாமாவின் உதவி அனாவசியம் என்று தோன்றவே, விடைபெற்றுக்கொண்டு வந்துவிட்டேன் இங்கே!"

கண்ணன் இப்படிச் சொன்னது தான் தாமதம், ரஹ்மான், பொறுக்கமுடியாத ஒரு துடிதுடிப்புடன், "உங்கள் மாமா இருந்த ஊர் எது சார்! அவருக்கு எத்தனை குழந்தைகள்!" என்று கண்ணனை விளித்துக்கேட்டான்.

'ஒரு வேளை இவன் மாமா அல்லியின் பெற்ற தகப்பனோ? என்ற ஒரு வேதனை நிறைந்த, சொல்லொணாத ஆவல் கவலை அவனுக்கு.

ஆ! நல்ல வேளை கண்ணன் பதில் அமைதி தந்ததே!

"மதுரை, ஜில்லாவில்தான் அவர் இருந்தார். இப்போதும் அங்குதான் இருப்பார். அவர் முதல் மனைவி இருக்கும்போதே இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டார். மொத்தம் குழந்தைகள் ஆறு இருந்தன, நாலு பெண் இரண்டு பிள்ளை, நான் போன சமயத்தில் அப்புறம் இரண்டு பிள்ளைகள் இளையாளுக்குப் பிறக்கவே, நாலு பெண், நாலு பிள்ளை என்று கணக்குச் சரியாக இருக்கட்டும்," என்று நான் வந்துவிட்டேன் என்று சொல்லிச் சிரித்தான் கண்ணன்.

நல்லவேளை, இவன் மாமன், அல்லியின் தகப்பன் அல்ல! என்று வேதனை நீங்கிப் பெற்றவனான ரஹ்மானுக்கு, கண்ணனுடன் நகைச்சுவையை அனுபவிக்க முடிந்தது. அவனும் 'ஹ ஹா' என்று சிரித்தான் கண்ணனுடன்.

ஆனால் கண்ணனோ, இவன் வாய்விட்டுச் சிரித்ததைக் கவனிக்காதவனாய், அல்லியின் மெல்லியச் சிரிப்பில் தான் ஆர்வம் காட்டினான்.

"அப்படியானால், உங்களுக்கு நெருங்கிய மனிதர்கள் யாரும் இல்லையாக்கும்! இனிமேல் கல்யாணம் செய்துகொண்ட பிறகுதான் மனைவி, குழந்தைகள் என்று ஏற்பட்டு, நெருங்கிய மனிதர்கள் கிடைக்கணும்!" என்று தொடர்ந்தான் ரஹ்மான் பேச்சை.

"உம், அதெல்லாம் கிடக்கட்டும்! இப்போ.... சத்தியா..... எனக்கு நெருங்கிய மனிதர்கள் நீங்களெல்லாம் இல்லையா? இதே போதும் எனக்கு! என்று பதிலிறுத்த கண்ணன், ரஹ்மானையும், அல்லியையும் மாறிமாறிப் பார்த்தான்.

ரஹ்மான் இன்னொரு கேள்வியையும், வேணுமென்றே, அடுத்தாற்போல கேட்டுவிட்டான்: "நீங்கள் கல்யாணம் செய்துகொள்ள மாமன் மகள், முறைப்பெண் இருப்பாளே!" என்றான்.

"போதும்! அதெல்லாம் நடக்காது, நடக்கவும் முடியாது, நடக்கவும் வேண்டாம்! நான் கல்யாணம் செய்துகொள்ளும்போது மாமா எட்டிக்கூட பார்க்கமாட்டார்! அவ்வளவு கரிசனம்! நான் யாரை எப்போது செய்து கொண்டாலும், கேள்வி கேட்பார் கிடையாது! நானே பார்த்துப் பண்ணிக்கொள்ள வேண்டியது!" என்று ஆவேசம் வந்தவன்போல பேசிக் கொண்டு வந்த கண்ணன், சிறிது நிதானித்து, "ஏன், உங்களுக்குள்ளே முறைப்பெண், முறைப்பையன் என்றுதான் பார்த்துக் கல்யாணம் செய்கிற வழக்கமா? உங்கள் - அல்லிக்கு . . . " என்று இழுத்தாற்போல் கேட்கவே, ரஹ்மான், "அல்லிக்கு முறைப் பையன் என்று யாரும் கிடையாது! எனக்கு என் உறவினர் யார், எங்கிருக்கிறார்கள் என்றும் தெரியாது. சிறுவயதிலேயே இங்கு வந்துவிட்டேன் நான்.வடக்கேதான் யாராவது உறவினர் இருக்கலாம் - ஆனால் அதெல்லாம் அறிய ஆவலே கிடையாது. எனக்கு மனிதர்கள், சுற்றத்தார் வேண்டுமென்பதில்லை; எனக்கு அல்லி ஒருத்தியே போதும். அல்லிக்கு நான், எனக்கு அல்லி என்று இத்தனை நாள் இருந்தாச்சு. இனி எப்படியோ!" என்று ரஹ்மான் சொல்லிக்கொண்டு வந்த சமயம் ஏற்கனவே உட்புறமாக நின்றுகொண்டிருந்த அல்லி, சடாரென உள்ளே விரைந்து சென்றதை, இருவருமே கவனித்தார்கள்.

"நான் கூட போகணும் சாயபு," என்று ரஹ்மானைப் பார்த்த கண்ணன், "கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் குடிக்க!" என்றான்.

யோசித்தவாறே ரஹ்மான், "அல்லி, குடிக்கத் தண்ணீர் கொண்டு வாம்மா!" என்று அல்லியை அழைத்தான். தண்ணீருடன் வந்த அல்லியிடமிருந்து டம்ளரை வாங்கிக்கொண்டு நீரைப் பருகி விட்டு, அவளிடமே அவள் கைகளிலேயே டம்ளரைத் திருப்பிக் கொடுத்தான் கண்ணன். டம்ளருடன் உள்ளே செல்லும அல்லியின் பின்னழகைச் சிறிது கவனித்துவிட்டு கண்ணன், ரஹ்மானை நோக்கி. "நீங்கள் 'பர்தா' வழக்கத்தை உங்கள் பெண்ணைப் பின்பற்றச் செய்யாதது எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது, சாயபு! முஸ்லீம் பெண்களின் உடையழகும், உடல் நிறமும் மிகவும் நேர்த்தியானவை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நேரிலே அறிய சமீபத்திலே தான் சந்தர்ப்பம் கிடைத்தது - உங்கள் விசாலமான மனப்பான்மையினாலே!... நான் போய் வருகிறேன், சாயபு!" என்று கூறிவிட்டு, அவன் கண்களையும் வேணுமென்றே ஒரு வினாடி சந்தித்துவிட்டு, அவ்விடம் விட்டுப் பெயர்ந்தான் கண்ணன்.

'ஜாடைமாடையாகக் கூறுகிறான், பையன். அல்லிமேல் தன் கவனம் இருப்பதை! அதற்குத்தான், யாரை வேண்டுமானாலும் தான் கல்யாணம் செய்து கொள்ளலாம், தடை சொல்பவர் கிடையாது என்று முதலிலேயே தெரிவித்துக் கொண்டான்... அல்லியைத்தான் மணப்பதைத் தடுக்க உறவினர் எவருமில்லையென்கிறான்.... பாவம், வீணாக ஆசையை வளர்க்கிறான்! அவன் உறவினர் யாரும் தடுக்காவிட்டாலும் நானாவது, என் மதத்தினராவது தடுப்போம் என்கிற யோசனை அவனுக்கு இல்லை!... அல்லி தன்னுடன் சகஜமாகப் பழகுவதால், அவளுக்கும் இஷ்டம், வேறு தடையென்ன இருக்கப்போகிறது என்று எண்ணம்போலும்! அல்லிக்கு அந்தப் பையன் மீது நாட்டமேயிருக்கலாம்! ஆனால் அவளுக்கு அறிவு உண்டு! அதெல்லாம் நடக்கக்கூடியது அல்ல என்று நான் ஒரு வார்த்தை அவளுக்குச் சொல்லிவிட்டால், அல்லது அவளே அதை உணர்ந்தாலும், பிறகு ஒரு கணமும் அவனை நினைக்கவும் மாட்டாள்!.... ஆனால், இனி இவர்கள் சந்திப்பதும் குறையும்! அவன் கல்லூரி திறந்தாச்சு! துணிகளையும் எடுத்துப் போயாச்சு! இனி அவன் வருவது குறையும்! கஷ்டமில்லை!'

இப்படித்தான் கண்ணன் சென்ற பின் ரஹ்மான் எண்ணியிருந்தான்.

ஆனால் கண்ணனின் வருகையைவிட அதிகமான பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது, இன்று காலை அவனிடமிருந்து ரஹ்மானுக்குத் தபால் மூலம் வந்த கடிதம்.

""சாயபு அவர்களுக்கு, அநேக நமஸ்காரம்.

நேரிலே தங்களிடம் ஒரு விஷயத்தைக் கூறத் துணிவுறாத என் மனம், என்னைக் கடிதம் மூலம் இதை எழுதத் தூண்டுகிறது.

நான் கூற விரும்பும் விஷயம், நன்றாக ஆராய்ந்த பின்னரே நான் எழுதுவதாகும். விஷயம் இன்னதென்று சொன்னதும், என் விருப்பத்தை வெளியிட்டதும், "நடக்கவே முடியாத காரியமாச்சே!" என்றுதான் தோன்றும். நானும் முதலில் அப்படித்தான் மலைத்தேன். ஆனால் வேதனையுற்றிருந்த என் மனம் தீவிரமாக யோசனை செய்த பின்னர், "நடக்கக்கூடும்!" என ஆர்ப்பரிக்கிறது! உங்களுக்கும் விளங்கிவிடும், நடக்கக்கூடிய ஒரு காரியத்தைப் பற்றியே நான் கூற முன் வந்தேன் என்பது.

எனக்கு உற்றார் உறவினர் எவரும் இல்லையாதலால், என்னை மணவாழ்க்கையில் புகுத்த முன்வருபவர் யாரும் கிடையாது. நானே என் மனதிற்கிசைந்த பெண்ணை மணப்பதிலே தடையேதும் இருக்க இடமில்லை.

ஆனால் என் விருப்பத்தைத் தடைகூற சமூகம் உரிமை கொண்டாடும்படியாக, என் மனம் தங்கள் பெண் அல்லியை நாடிவிட்டது. கலப்பு மணத்தைச் சமூகமும் மதமும் ஒப்புமா என்ற கேள்விக்கு விடை, 'கலப்பு மணங்கள் எத்தனை நடப்பதில்லை?' என்பதேயாகும்.

கலப்பு மணங்களை வற்புறுத்திக் கூறாதுவிட்ட பெரியவர்களின் எண்ணம், அவற்றால் நன்மையை விட தீமை அதிகமாகிவிடும் என்பதுதான். ஆனால் எப்படிப்பட்ட கலப்பு மணங்களால் தீமை விளையும்?

புருஷனும், மனைவியும் வேறு வேறு பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வந்தால், முதலில் அது அருவருப்பு அளிக்காவிடினும் நாளடைவில் இல்லற வாழ்க்கையில் சலிப்பு பிறக்கக்கூடிய சமயத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு, அவை முற்றி, வேற்றுமை எண்ணத்தால் தீமை விளையலாம். மனைவி, புருஷனின் பழக்கவழக்கங்களில் குற்றம் கண்டு, ஏளனம் செய்யலாம். வேடிக்கையாகவே செய்தாலும் கணவனுக்கு அது குற்றமாகப்பட்டு, வார்த்தை முற்றி, வேடிக்கை வினையாகலாம்.

மனைவி சாகபக்ஷிணியாயிருந்து புருஷன் விரும்பும் மாமிச உணவை வீட்டில் சமையல் ஆள்கூட தயார் செய்யக்கூடாது, புருஷன் அதைச் சாப்பிடவே கூடாது என்று தடுப்பாளாயின், முதலில்,. புதுமை இன்பத்தில், புதுமணவாழ்க்கையில், அவன் அவற்றைப் பொறுத்தாலும், பிறகு பொறுமையிழந்து இல்லற வாழ்வின் அஸ்திவாரத்தை அசைக்கத் துணியலாம். குடும்பத்தில் சந்தோஷம் குலையலாம். 'ஏதோ பிரமையினால் நடந்துவிட்ட நம் திருமணம் பிசகு!' அவர்கள் நினைத்துப் பொருமலாம்.

மனைவியைக் கணவன், "நீ புடவையை அப்படிக் கட்டக்கூடாது, இப்படிக் கட்டணும்!', 'அதை அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்!' என்று கண்டித்தால், மனைவிக்கு நாளடைவில் அது சகிக்க முடியாமல்போய், ரோஷம் அதிகமாக, இல்வாழ்க்கையின் இன்பம் பாதிக்கப்படலாம்!

ஆனால் நம் விஷயத்தில் அப்படி ஏதும் நேராதே! இறைவனருளால் நான் அல்லியை மணப்பேனாயின், ஒருநாளும் ஒருவித விபரீத எண்ணமும் ஏற்படாமல் இருக்கும் என்பது திண்ணம். எங்கள் இன்ப வாழ்க்கைக்கு நீங்கள்தான் நேர்த்தியான அஸ்திவாரமும் போட்டு வைத்திருக்கிறீர்களே! அதன்மேல், எங்கள் இன்ப மாளிகையை எழுப்புவதும் உங்கள் பொறுப்புதான்.

நீங்கள் முன்கூட்டியே இந்தத் திருமணத்தை எதிர்பார்த்தவர்போலவே அன்றோ, அவளை வளர்த்து வந்திருக்கிறீர்கள்! மாமிசம் புசிக்கும் வழக்கத்தை அறவே விலக்கியிருக்கிறீர்கள்! இந்து மதத்தையும் வெறுக்காத பெருந்தன்மை மனம் கொண்டிருக்கிறீர்கள்! பெண்கள் 'பர்தா' விலிருக்கும் பழக்கத்தையும் அகற்றியிருக்கிறீர்கள்! உங்கள் பெண்ணுக்கும் உங்கள் பெருந்தன்மையான சிறந்த குணங்களே படிந்துவிட்டன, தாயில்லாப் பெண் அவளைத் தாங்களே குழந்தைப் பருவமுதல் வளர்த்திருப்பதால்.

நானும் ஒருநாளும் பிறர் மதத்தை வெறுத்தவனல்ல. இந்தக் காலத்துச் சீர்திருத்தப் பிரசாரங்களில் கலந்துகொள்ளாவிடினும், அவற்றில், ஆர்வம் உடையவன், அவற்றை மனப்பூர்வமாக ஆதரிப்பவன். உங்கள் தொடர்பால், என் ஆர்வங்கள் நிறைவேறுமேயன்றி, சிதறாது. உங்களுக்கும் என் தொடர்பால் யாதொருவித வருத்தமும் நேராது.

உங்கள் மதத்தினரும், என் மதத்தினரும் நிச்சயம் ஆக்ஷேபணை கூறுவார்கள் - நாம், இங்கேயே இவர்களெதிரிலேயே திருமண பந்தத்தால் ஒன்று கூடினால். ஆனால் அதற்கு வேறு வழியில்லையா? இந்தப் பரந்த நாட்டிலே, வேறு பகுதியிலே நாம் மூவரும் சந்தோஷமாகக் குடியேறுவோம்! நானும், பைஜாமாவும் தொப்பியும் அணிந்துகொண்டு, முஸ்லீம் ஆகிவிடுகிறேன். நமக்கு ஆகாரத்தில்தான் இப்போதும் ஒரு வித்தியாசமும் கிடையாதே! மற்ற சில்லரைப் பழக்க வழக்கங்கள் ஒரு பொருட்டா? ஒரே மதத்தினருக்குள்ளேயே அந்தச் சில்லரை வேறுபாடுகள் கொள்ளையாய் உண்டே! வெள்ளையர் உடையாகிய சூட்டும் ஹாட்டும் இந்தியர்கள் அணிவதை எந்த சமூகமும் ஆக்ஷேபிக்கிறது! நான் துலுக்க உடையை இனி வாழ்நாள் முழுதும் அணிந்து, துலுக்கனாவதில் தவறேதேனுமுண்டோ?

இப்படி பலவிதமான யோசனைகளை நான் செய்து ஆராய்ந்த பின்னரே, என் வேண்டுகோளைத் தங்களிடம் கூற முன் வந்தேன். என் வேண்டுகோளில்,

சிறுபிள்ளைதனமும், அறியாமையும் உங்களுக்குத் தோன்றாத என் வேண்டுகோள் தங்களால் மறுக்கப்படாது என்று உறுதிகொண்டிருக்கிறேன்.

ஒருக்கால் தங்கள் முதிர்ந்த அறிவுக்கு, என் விருப்பம் நிறைவேற இயலாது என்று முடிவு தோன்றினால், அதை அன்பு கூர்ந்து கடித மூலமே எனக்குத் தெரிவியுங்கள். இன்னும் இரண்டு நாள் யோசித்தபின் எழுதினாலும் எனக்கு வியாழக்கிழமைக்குள் தங்கள் பதில் கடிதம் கிடைக்கட்டும். நீங்கள் கூறப்போகும் முடிவை, இடையிலுள்ள நான்கு நாட்களும் ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன். ... இதோ விலாசம்....

உங்கள் கடிதம் எனக்கு மகிழ்வூட்டுவதாயிருப்பின், வரப்போகும் வெள்ளிக்கிழமை மாலை, நீங்கள் 'நமாஸ் செய்யவரும் மசூதியின் வெளியில் உவகையுடன் காத்திருப்பேன், தங்களைக் காண.

உங்கள் கடிதம் எனக்கு ஏமாற்றம் அளிப்பதாயின் அதே வெள்ளிக்கிழமை மாலை, அதே வெளி வாசலில் உயிரற்றுக் கிடப்பேன்! 'அல்லாஹோ அக்பர்!... அல்லா! அடுத்த பிறவியிலாவது அல்லியையும் என்னையும் ஒன்று சேர்த்து மணமுடித்து வைப்பாய்!' என்ற கடைசி வேண்டுகோளுடன், விஷமருந்திவிட்டுச் சாய்ந்திருக்கும் என்னைப் பிணமாகத் தாங்கள் காணலாம்!"

அன்பன்

கண்ணன்

கண்ணனிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்து முடிந்த ரஹ்மான், "அடப்பாவமே! இதென்ன, இந்தப் பையன் கடைசியில் இப்படி எழுதியிருக்கிறானே!" என்று அயர்ந்து போய்விட்டான். பிறகு "அப்படி எழுதினால் நான் நிச்சயம் சம்மதித்து விடுவேன் என்றுதான் அப்படி எழுதியிருப்பான்! அதுவுமில்லாமல், அல்லியின் இஷ்டம் எப்படியோ! அதைக் கேட்காது இவன் இவ்வளவு வற்புறுத்தி எழுதிவிடுவது என்ன நியாயம்! அல்லி தன்னுடன் சகஜமாகப், பழகிவிட்டாள் என்றதனால் இப்படி எண்ணிவிடலாமா என்ன?" என்று அவனுக்குத் தோன்றியது. அல்லிக்கு கண்ணன்மீது நாட்டம் இருக்கிறது என்பது கொஞ்சம் தெரிந்திருந்தாலும் "சிறு பெண், நேற்றுக்குழந்தை! அவளுக்கு என்ன தெரியும்! நாம் 'அப்படி நடக்காதம்மா,' என்றால் உடனே தெரிந்துகொள்வாள், புத்திசாலி! அவன்தான் இதை ஏதோ பிரமாதமாக எடுத்துக்கொண்டு, கல்யாணம் பேசுகிறான்!" என்ற எண்ணம் ரஹ்மானுக்கு.

சிறிது பொருத்து ரஹ்மான், "அல்லி இங்கே வா, இதைப் படி! பாவம், எப்படி எழுதியிருக்கிறான்? ஆனால் எப்படி நடக்கக்கூடும்!" என்று கூறியவாறு அல்லிக்கு அதைப் படிக்கக் கொடுத்துவிட்டு புழக்கடைக்குச் சென்றான்.

அல்லி ஒரு கால் மணி நேரங்கழித்து கண்களில் நீர் தளும்ப வந்தாள் சமையலறைக்கு. அங்கே சாப்பிடத் தயாராக உட்கார்ந்திருந்த ரஹ்மானுக்கு மௌனமாக உணவு பரிமாறினாள்.

"நீயும் உட்கார்ந்து கொண்டு சாப்பிடேனம்மா, தினம்போல! ஏன் தட்டை எடுத்து வைத்துக் கொள்ளவில்லை?" என்று கேட்டான் ரஹ்மான்.

"அப்புறம் சாப்பிடுகிறேன் பாபா! சாப்பிடணுமென்றே தோனல்லை" என்றாள் அல்லி.

'ஏனம்மா?..... கடிதத்தைப் பார்த்து வருத்தமாயிருக்கா? ஆமம்மா, எனக்கும் அப்படித்தான் இருக்கிறது! அந்தப் பையன் சாவு கீவுன்னு அனாவசியமாக எழுதியிருக்க வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு கொஞ்சமாக சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு, எழுந்துவிட்டான் ரஹ்மான்.

பாவம், அல்லி பாபாவின் வார்த்தைகளால் மனம் தேறினாள்!

'பாபா கண்ணனின் விருப்பத்தை நிறைவேற்றக் காத்திருக்கையில், அவன் அப்படி சாவு கீவு என்று அனாவசியமாக எழுதியிருக்க வேண்டாம்!' என்பதைத்தான் பாபா கூறினான் என்று நினைத்துவிட்டாள்!

பாபா எழுந்து போனதுமே, அவளும் உணவு உட்கொண்டாள். பாபாவின் வார்த்தைகளால் ஆறுதல் அடைந்துவிட்ட அவள், வழக்கம்போல சாப்பிட்டாள். சமையலறையைப் பரபரவென்று சுத்தம் செய்தாள்; காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

சாப்பிட்டுவிட்டு வாசலுக்குச் சென்ற ரஹ்மான், உள்ளே அல்லி சாப்பிட்டதையும், என்றும்போல அவள் அனைத்தும் செய்வதையும் கண்ணுற்று, "நம் மனதை அறிந்தும் அல்லி வருத்தம் அடையவில்லை! அல்லிக்குக் கண்ணனை மணம் செய்து கொள்ளும் எண்ணம் சிறிதும் இருக்கவில்லை, இல்லை என்று தெரிகிறது!" என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்.

அந்த நம்பிக்கை வந்த பின்னர் ஏற்பட்ட ஏமாற்றம்தான், அவன் உள்ளத்தைக் குலுக்கிவிட்டு, உடம்பை அடித்துப் போட்டுவிட்டது. பொறியில் அகப்பட்ட எலி போல வேதனைக்குள்ளானான்.

சுமார் இரண்டு மணி இருக்கும். அதற்கு முன் இரண்டு மூன்று தடவை ரஹ்மான் தைத்துக் கொண்டிருப்பதை பார்த்துவிட்டு உள்ளே சென்று விட்ட அல்லி, அப்போது பாபாவின் அருகில் வந்தாள்.

"பாபா, இனிமேல் நானும், நீயும் பிரிந்துவிடுவோம் என்ற பயத்துக்கு இடமில்லை!" என்றாள்.

'மூவரும் குடியேறுவோம்!' என்ற கண்ணனின் வார்த்தைகளின் நினைவு அவளுக்கு; கல்யாணமானாலும் பாபாவைப் பிரியோம் என்ற சந்தோஷம் அவளுக்கு.

"ஆமம்மா அல்லி, அந்த பயமில்லை! என்று பதிலளித்தானே, அவன் எண்ணம் என்ன?

'கல்யாணமில்லை,' என்றுதான் அல்லி சொல்வதாக அவன் நினைப்பு! கண்ணனின் வார்த்தைகள் அல்லி மனதில் ஊன்றினாற் போல அவன் மனதில் ஊன்றாத காரணம்? யோசனையின்மை! தன் தவறை, தான் பிசகாக நினைத்ததை, அவன் அல்லி அடுத்தாற்போல கூறியபோதுதான் தெளிவாக உணர்ந்தான்.

"பாபா, அவர் இரண்டுநாள் கழித்து எழுதினாலும் எழுதலாம் என்று சொல்லியிருந்தாலும், நீங்கள் இன்றே எழுதிவிடுங்களேன்! சந்தோஷ சமாசாரத்தை இரண்டு நாள் முன்னதாகக் கேட்பதில் என்ன நஷ்டம்? நீங்கள் இரண்டு நாள் கழித்து எழுது தபாலில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு, எங்காவது இரண்டு நாள் அது தாமதப்பட்டுவிட்டால், கடிதம் வரக்காணோமே, என்று மதூதியண்டை அவர் உயிரை மாய்த்துக்கொண்டு விட்டாலும் விடுவார் பாபா, எனக்கு பயமாகயிருக்கு!" என்று கூறிவிட்டு, அவ்விடத்தைவிட்டு அகன்றாள் அல்லி!

'ஆ! என்ன சொல்கிறாள்!' என்னும் அதிர்ச்சி அப்போதுதான் ஏற்பட்டதவனுக்கு. உயரே விமானத்தில் பறந்து செல்பவன் தரையில் மோதுண்டதைப்போல, ஒரு உயிரற்ற தன்மை, நெஞ்சிலும் உடலிலும்!

'என்ன சொல்கிறாள் அவள்! சந்தோஷச் செய்தியைச் சீக்கிரம் தெரிவித்துவிடுங்களேன் என்கிறாளா? ஏமாற்றத்தால் உயிரை மாய்த்துக்கொண்டு விடுவான் கடிதம் போய்ச் சேராவிட்டால் என்று பயப்படுகிறாள்! அப்படியானால் ஏமாற்றமளிக்கும்படி நேர்ந்தால் அவன் உயிர்விடுவேன் என்று சொல்வதை, இவள் நம்புகிறாளா? அவன் அன்பிலே, அவன் வார்த்தைகளிலே அவ்வளவு உண்மையும், உறுதியும் காண்கிறாளா? அவள் தன்னை மணக்காவிட்டால் அவன், உயிர்விடுவான் என்பதுதான் இவளுடைய நம்பிக்கையுமா? இவள் மனதும் அவன் மனதுடன் ஒன்றுபட்டுவிட்டதா?'

இந்தக் குழப்பத்தால் அவனுக்குத் தலை சுழன்றது. மண்டையில் இடி இடித்தது. சோர்வும் கடுமையான தலைவலியும் அவனை ஆட்கொண்டு அவனைப் படுக்கையிலே கிடத்தின.

** ** **

இப்படிப் படுத்தவன்தான் பழைய நினைவுகளுக்கு எடுத்தேகப்பட்டான் மானஸீகமாக. இறந்த கால முடிவுக்கு வந்தவன், நிகழ்காலத்தைப் பற்றி சிந்திக்கலானான்.

கடந்த சில வருஷங்களாக அமைதியும், ஆனந்தமுமே கண்டிருந்த அவனுக்கு, இந்த தர்ம சங்கடமான நிலைமைதான் மாபெருங்கஷ்டமாயிருந்தது!

ஆ! தான் இன்னது செய்வதென்பதே விளங்கவில்லையே! அல்லியின் மனம் கண்ணனைத் தான் நாடிவிட்டது. அவனை மணக்கப் போவதாகவே அவள் மனப்பால் குடித்து வருகிறாள்! மனச்சாட்சி, வற்புறுத்தி வலியுறுத்தி, அதைத்தான் சொல்கிறது! கண்ணனின் விருப்பமும், தன் கண்ணான அல்லியின் விருப்பமும் ஒன்றாயிருக்கும்போது, அவன் அவர்கள் விருப்பப்படி நடந்து கொள்வதா, அல்லது தன் விருப்பப்படி நடப்பதா?.....

ஆனால்..... தன் விருப்பம் என்ன? அந்தப் பையனுக்கு இவளைக் கொடுக்கக்கூடாது என்பது! அப்படியென்றால், அல்லி மனமுடைந்து வருந்தணும் என்பதா? இல்லையே!... ஐயோ, பிற்காலத்திலும் அவள் சந்தோஷமாய் வாழவேண்டும் என்பதுதானே அவன் ஆசை, அக்கரை எல்லாம்! அவளை இத்தனை நாளும் அருமை பெருமையுடன், ஒரு குறையும் தோன்றாவண்ணம் வளர்த்துவிட்டு, இப்போது அவன் மனம் முறியும்படி நடந்துகொள்வதா? அவள் மணவாழ்க்கை இன்பகரமாக இருக்க வேண்டியதைத்தானே தான் கவனிக்கணும்! தன் வாழ்க்கையை செம்மைப்படுத்தினாளே, அவள் வாழ்வைத் தான் குலைப்பதா? அவன் கடமை, அவளை அவள் விரும்பும் பையனுக்குக் கட்டிக்கொடுத்துச் சந்தோஷமாக வைத்திருப்பதன்றோ? ஆனால் கடமையை நிறைவேற்றத் துணிவு வருமோ தனக்கு! கட்டுப்பாட்டை மீறிப் போக.... ஐயோ, துணிவு வராது போலிருக்கிறதே! ....வராது, எப்படித் துணிந்து தன் மதத்தினன் அல்லாதவனுக்குப் பெண்ணைக் கொடுப்பான்! இந்துவுடன் சம்பந்தம் செய்வதைப் பார்த்துக்கொண்டு சமூகம் சும்மா இருக்குமா, அல்லது தன் மனம் தான் நிம்மதியாய்விட்டு வைக்குமா?..... பைஜாமாவும், தொப்பியும் அணிந்து முஸ்லீமாகிவிடுகிறேன் என்கிறானே, அதைக் கண்டு கண்கள் ஏமாந்து போனாலும், தன் மனச்சாட்சி ஆயிரம் துளை துளைத்து ஆயிரமாயிரம் கண்களை மனத்தில் உண்டாக்கிவிடுமே!

இதே கவலை, திகில் கொண்டு மத்திடைத் தயிராகக் கலங்கியது அவன் உள்ளம். ஒரு வழியும் காணாத அவன் மனம். அல்லாவை நாடியது.

ஆ! அல்லாதான் தன் இக்கட்டைத் தீர்த்து வைக்க வேண்டும்! வேறு யார் யோசனை கூறுவார்கள்? இந்தச் சங்கடமான நிலைமையை இந்துவான அவனை, முஸ்லீம் ஆன தான் மாப்பிள்ளையாக ஏற்பதா என்னும் இந்த நிலைமையை, ஐயோ, எப்படி சமாளிப்பது! கண்ணன் இந்து - அல்லி, முஸ்லீம், இவர்களிருவருக்கும் எப்படி?

ஆ! என்ன, என்ன, அல்லி என்ன! முஸ்லீமா?......ஆம், ஆனால் இப்போதல்லவா அவள் முஸ்லீம்! பிறந்த பொழுது! ஐயோ, பிறந்து நான்கு வருடங்கள் வரை அவள் இந்துவல்லவோ? தன் மதி எங்கே போயிற்று? அவளுக்குப் பைஜாமாவும், நீண்ட கைச்சட்டைகளும் அணிவித்து அவனல்லவோ அவளை முஸ்லிம் ஆக்கினான்! கண்ணனைப் பழித்தானே சிறிது முன்பு! தான் அப்படிச் செய்தவன்தானே! அந்தோ! இந்த உண்மையை முன்னரே உணராது போனானே!'

'இப்போதுதான் என்ன மோசம்? இப்போதாவது உண்மை, கண்களுக்குப் புலப்பட்டதே! அல்லாவை நினைத்ததுமே, கருணை வள்ளல் அவர், விரைந்தாரே! அவர் அருளே அருள்! தான் எத்தனை நாழியாக பழைய நினைவுகளில் ஈடுபட்டிருந்தும், அல்லி முந்திய நாளில் இந்து என்ற நினைவே இல்லாமலிருந்ததே. இப்போது 'வழிகாட்டு!' என்று அல்லாவிடம் புகலடைந்ததும், பிரமை நீங்கியதே! 'அல்லியின் பிறப்புரிமை கண்ணனை மணப்பதே' என்பதைத் தனக்கறிவுறுத்த அல்லவோ, மறைந்திருந்த, மறந்திருந்த உண்மை ஒன்றை ஜகஜ் ஜோதியாகப் பிரகாசிக்கச் செய்துவிட்டார்? ஆம்! அல்லியின் பிறப்புரிமை கண்ணனை மணப்பதேயாகும். அதைத் தடுக்க அவன் யார்?'

அவள் தன் கையில் சிக்காமல் இருந்திருந்தால், தந்தையிடமே இருந்திருந்தால், ஒரு தடையுமில்லாமல் இந்தக் கண்ணனையே மணந்தும் இருக்கலாம். பாவம், தன் கையில் சிக்கினாலும் அல்லி, அவனையும் அறியாமல், அவளுக்குச் செய்திருக்கும் நன்மைகள்தான் எத்தனை? ஆகா! அவள் தனக்குச் செய்த உயர்தர நன்மைகளுக்கு பதிலுபகாரம், அவள் மதத்தினனான அவள் காதலனுடன் அவளை வாழாமல் தடுப்பதா? தடுக்கயிருந்தானே, பாவி. தடுக்க அவன் யார்?

ஜன்ம ஜன்மங்களுக்கும் அவளுக்குக் கடமைப்பட்டிருக்கக் கூடிய நன்மைகளை அவளால் அடைந்து, ஒரு பன்னிரண்டு வருஷம் அவளைப் பாதுகாத்த தோஷத்திற்காக, அவள் வாணாளை வீணாக்க அவனுக்கு என்ன உரிமை!

அந்தோ! அவள் ஏன் முஸ்லீமான அவனிடம் வந்து சேர வேண்டும்?...... இந்துவான எவனிடமாவது இப்படி வளர்ந்திருந்தால், ஒரு தடையுமில்லாமல் அவள் விருப்பம் ஈடேறியிருக்குமே! ஆனால்.... விதி செய்யும் பல விளையாடல்களில் இதுவும் ஒன்றுதான்! இவள் தன்னிடம் முஸ்லிம் பெண்ணாக வளர்ந்த பின்.... பலவித மாறுதல்களுக்குப்பின், கண்ணனின் கையைப் பிடிக்கணுமென்று விதி போலும்! ஆம், ஆம்! நதியொன்று எத்தனை இடங்களில், எத்தகைய மாறுதல்களோடு பிரவகித்தாலும் இறுதியில், கடமையெல்லாம் முடிந்தபின் , கடலையே போய்ச் சேருகிறதன்றோ? அதுபோலதான் அல்லியும்! கண்ணனை மணக்கவே அவள் பிறந்தாலும், அவனைப் புனிதனாக்கக் கடவுள் இட்ட பணியை நிறைவேற்றத் தன்னிடம் வந்து வளர்ந்துவிட்டு இப்போது கண்ணனை அடையவிருக்கிறாள்!

அல்லாவின் விருப்பத்தாலன்றோ, அருளாலன்றோ, ஒரு பெரிய தவறு செய்ய இருந்தவன் தப்பினான்! அவர் விருப்பத்தைத் தன் விருப்பமாகக் கொண்டு, துணிவுடனும் உவகையுடனும் தன் கடமையை அவன் நிறைவேற்ற வேண்டாமோ! கவலை எதற்கு? அல்லியையும் கண்ணனையும் ஒன்று சேர்த்துவிட்டுத்தான் அவர்களைப் பிரியணுமென்பதில்லையே. கண்ணன் கூறியபடி.... ஆம், அல்லியும் அதைத்தான் கூறியிருக்க வேண்டும்..... மூவரும் ஒன்று சேர்ந்து இருப்பதில் என்ன தடை? தான் ஏதும் தவறானதைச் செய்யாத ஆறுதல், அவள் பிறப்புரிமையைக் காப்பாற்றிய உவகை, அவளுடைய இன்பமான இல்லற வாழ்க்கையினால் தன் மனதிற்கு அமைதி, இவைதானே அவனுக்குக் கிட்டப்போகின்றன?

புத்துணர்ச்சி பெற்றவனாய் படுக்கையைவிட்டெழுந்தான் ரஹ்மான், மத்திடைத் தயிர்போல அவன் கலங்கினாலும் வெண்ணெய் கிடைத்துவிட்டதே!

"அல்லி, அல்லி! சீக்கிரம் தபால் கவரையும், காகிதத்தையும் எடுத்துவாம்மா!" என்று கூவியவாறே பரபரப்புடன் திண்ணையில் விளக்கைப் பெரிதாக்கிவிட்டுப் பேனாவுடன் அமர்ந்தான் ரஹ்மான் சாயபு, 'மணியாகிவிட்டதே பாபா! எப்படியும் இன்றைய தபாலிலே போகாதே! நாளைக்கே எழுதலாமே! மத்தியானம் எழுதி போட்டிருந்தால்...." என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அல்லி.

'எனக்கு என்னவோ தலைவலி மண்டையைப் பிளந்ததம்மா? இல்லாவிட்டால் எழுதியிருக்கமாட்டேனா? பரவாயில்லை. இப்போது எழுதிவிடுகிறேன், எடுத்து வா அவற்றை!' என்று கனிவுடன் கூறிய ரஹ்மான், சிரித்துக் கொண்டே தொடர்ந்து, "உனக்கு வெட்கமாயிருக்கிறதாக்கும்! நானே போய் எடுத்துக்கொள்ளட்டுமா?" என்று எழுந்தான் நாற்காலியிலிருந்து.

நாணம் சூழ்ந்துகொண்டாலும், அதை மறைக்க முயன்று கொண்டே அல்லி, "போ, பாபா! என்ன பாபா! வெட்கமெதற்கு! இரு, இரு நானே கொண்டு வருகிறேன்!" என்று துள்ளி குதித்துக்கொண்டே உள்ளே ஓடினாள்.

அலாதியான சந்தோஷம் பொங்கும் முகத்தினளாய், முகத்தில் பன்மடங்கு பொலிவு பிரகாசிக்க, நடை துள்ள உள்ளே ஓடிய அல்லியைப் பார்த்தவாறே, இமை கொட்டாமல் உட்கார்ந்திருந்தான் ரஹ்மான். வானுலக தேவரின் ஒரு அம்சமான அந்த இமை கொட்டாத் தன்மையிலே, அவனும் ஒரு தேவாம்சம் பெற்றுவிட்டான்! அல்லியிடமே தன் உலகம்

முழுவதும் அடங்கியிருப்பதாக, இதுநாள்வரை உரிமை கொண்டாடி, இறுமாந்திருந்த அவன் உள்ளம் இப்போது, 'அல்லி அல்லி! இந்துவாகப் பிறந்த உன்னை, இந்துவை மணக்கக் கூடாது என்று தடுத்து உன் வாழ்வை, பாழ் செய்ய இருந்தேனே! உன் பிறப்புரிமையைத் தடுக்க நான் யார்?' என்று எண்ணமிட்டு உருப்போட்டுக்கொண்டிருந்தது!

சிறிது பொருத்து அல்லி கொணர்ந்திருந்த வெள்ளைத் தாளின் மேலே, "ஆதரிசமான கலப்பு மணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கட்டும், உங்கள் திருமணம்!' என்று கண்ணனுக்கே எழுதிக்கொண்டிருந்தது ரஹ்மானின் கை.

மகிழ்வும், அன்பும், பக்தியும் நன்றியும் உள்ளத்திலே பெருக, அல்லி, "என் பாபா, என் அருமையான பாபா!" என்று போற்றிக் கொண்டிருந்த அவ்வமயம், "தடுக்க நான் யார்?" என்று கேட்டுக் கொண்டிருந்ததே பாபாவின் மனம்? அதன் காரணங்களெல்லாம், அவன் எப்படி அறிவான்?

**********

(சுதேசமித்திரன், நவம்பர் 2/9/16/, 1947)